வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 04.01.2023 புதன்கிழமை இதழ் : 25 பக்கங்கள் : 12

## தேர்தல் வேண்டாம்!

### உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு

கொழும்பு, ஜன. 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதென்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ. எம்.ஆர். விஜேசுந்தர, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பலரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுவை தாக்கல் செய்தார்.

ஒட்டுமொத்த தேசமும் எதிர்நோக்கும் இந்த நெருக்கடியான நிலையில்

15

## யாழ்.மாநகர சபை உறுப்பினர்களை கட்சி ரீதியாக அழைக்கிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜன. 04

யாழ்ப்பாண மாநகர சபை தொடர்பான குழப்பமான சூழல் எழுந்துள்ள நிலையில், மாநகர சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஊடாக அனுப்பப்பட்டுள்ள அழைப்பில், கட்சி ரீதியாக சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபையின் 2023ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டம் முதல் முறை தோற்கடிக்கப்பட்ட பின்னர், இரண்டாவது முறையாகவும் சமர்ப்பித்து வெற்றியீட்டும் நிலைமையில்லாததால், முதல்வர் வி.மணிவண்ணன் பதவியை துறந்திருந்தார்.

இரண்டாவது

15

# சீனாவுடன் மிகவிரைவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல அறிவிப்பு



கொழும்பு, ஜனவரி 04

நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடிக்கு ஏதேனுமொரு வகையில் தீர்வு காணப்படாவிட்டால் இறக்குமதி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான சிறந்த வழி இயன்றவரை பல்வேறு நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதாகும். சீனாவுடன் விரைவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடு வதே அரசாங்கத்தின் இலக்காகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன நேற்று தெரிவித்தார்.

15

## இந்த வார இறுதியில் நாடு திரும்புகிறார் கோட்டாபய

கொழும்பு, ஜன. 04

டுபாய் சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வார இறுதியில் நாடு திரும்பவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷ அமெரிக்க குடியுரிமையை மீளப்பெற விண்ணப்பித்துள்ளதாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அவர் கடந்த ஜூலையில் நாட்டை விட்டு வெளியேறி சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நாடு திரும்பி னார். பின்னர் அவர் சமீபத்தில் டுபாய் நாட்டுக்குச் சென்றுள்ள நிலையில், குடியுரிமை தொடர்பான அவரது கோரிக்கையை அமெரிக்கா இதுவரை பரிசீலிக்கவில்லை என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் முன்னாள்

15

உள்ளூராட்சி தேர்தல்

## வேட்புமனுக் கோரல் அறிவிப்பு இன்று வரும்

கொழும்பு, ஜன. 04

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனு கோரும் அறிவித்தல் இன்று புதன்கிழமை மாவட்ட செயலாளர்களால் வெளியிடப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அறிவிப்பு வெளியிடப்பட்ட இரண்டு வாரங்களுக்குப் பின்னர் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன.

வேட்புமனுக்களை கோரும் வர்த்த மானி அறிவித்தலை அரச அச்சகத் திணைக்களத்துக்கு இன்று அனுப்பி வைப்பதற்கு முன்னதாக இறுதிப்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் நேற்று இடம்பெற்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## மதுபானங்கள் விலை உயர்வு

கொழும்பு, ஜன. 04

அனைத்து வகையான மதுபானங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள தாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டு

15

## மின்சாரம்,பெற்றோலியம்,வைத்தியசாலை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

கொழும்பு, ஜன. 04

மின்சாரம், பெற்றோலியம் மற்றும் வைத்தியசாலை சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவிற்கு அமைய இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க,

1. மின்சாரம் வழங்கல் தொடர்பான சகல வேவைகள்.

2. பெற்றோலிய உற்பத்திகள் - எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம்.

3. வைத்தியசாலைகள், மருந்தகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு, வரவேற்பு, பாதுகாப்பு, சிகிச்சையளித்தல் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

## மார்ச் 04 ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்?

கொழும்பு, ஜன. 04

உள்ளூராட்சிமன்ற தேர்தலை மார்ச் 04 ஆம் திகதி நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு ஆராய்ந்துள்ளது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் விசேட கூட்டமொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது மார்ச் 10 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன், தேர்தலை மார்ச் 4 ஆம் திகதி நடத்துவது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் என 340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிகாலம் ஓராண்டு காலம் நீடிக்கப்பட்டது. இதன்படி 2023 மார்ச் 20 ஆம்

15

## பெற்றோல்,டீசல் வரி அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 04

ஒக்ரேன் 92 மற்றும் ஒக்ரேன் 95 வகை பெற்றோல் லீற்றர் ஒன்றின் வரி 27 ரூபாயில் இருந்து 52 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, சுப்பர் டீசலின் வரி 13 ரூபாயிலிருந்து 38 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்

15

## சிறுமி பாலியல் வன்புணர்வு: பொலிஸ் அலுவலர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 04

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் 19 வயதான யுவதியொருவரை இரண்டு வருடங்களாக பாலியல் வன்புணர்விற்குள்ளாக்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தன்னை இரண்டு வருடங்களாக பாலியல் வன்புணர்விற்குள்ளாக்கி, வீடியோ படம் எடுத்து மிரட்டியதாகவும், அதனை பிரதேச இளைஞர்களிடம் பகிர்ந்ததாகவும், பிரதேச இளைஞர்களும் தன்னை வல்லுறவுக்குள்ளாக்க முயன்றதாகவும் யுவதியொருவர் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நகரை அண்மித்த பகுதியொன்றைச் சேர்ந்த சிறுமியொருவரே 2 ஆண்டுகளாக பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இரண்டு வருடங்களின் முன்னர் நிவாரணம் வழங்குவதாக தெரிவித்து, அப்போது

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது…!

இந்த ஊர்க்குருவி யாழ்ப்பாணம் 'ஈழநாடு' வில் பணியாற்றிய எண்பதுகளின் ஆரம்ப காலம் அது. அப்போது வாரமலரின் ஆசிரியராக இருந்த சசிபாரதி என்று இலக்கிய உலகில் அறியப்பட்ட சு. சபாரத்தினம் அவர்கள் இந்த ஊர்க்குருவியிடம் தனது வாரமலரில் எதனையாவது புதுமையாக செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது செய்திகளை மாத்திரமே எழுதிக்கொண்டிருந்த இந்த ஊர்க்குருவி, ஒரு கேள்வியை ஒரே தரப்பில் நால்வரிடம் கேட்டு அவர்கள் சொல்லும் பதிலை அப்படியே எழுதி அதனையே வாரமலரின் தலைப்புச் செய்தியாக்கியது.

பரபரப்பாக அந்த செய்தி பேசப்பட்டது ஞாபகத்துக்கு வருகின்றது.

எழுபத்து ஏழில் தமிழீழத்திற்கான மக்கள் ஆணையைப் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, பின்னர் மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிட தயாராக இருந்த வாரம்.

கூட்டணி தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு விட்டதா? என்பதுதான் அந்த வாரக் கேள்வி. அப்போது கூட்டணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம், அதன் நிர்வாக செயலாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், சாவகச்சேரி வி. என். நவரத்தினம், கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் ஆகியோரிடம் அந்தக் கேள்வி கேட்டகப்பட்டது. நால்வரும் சொன்ன விடை அன்றைய தலைப்புச் செய்தியாகியிருந்தது.

இப்படி நால்வரிடமும் கேட்கப்பட்டு பதில் பெறப்பட்ட விடயம் அந்த மற்றயவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. ஆனால், நால்வரின் பதிலும் எந்தவித மாறுபாடும் இல்லாமல் ஒரே பதிலாகவே இருந்தது.

இந்தக் சம்பவம்தான் அந்தச் செய்திகளை படித்தபோது ஏற்பட்டது.

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டம் ஒன்றில், நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக போட்டியிடுவது தொடர்பில் பேசப்பட்டது செய்தியில் முக்கிய இடத்தை பிடித்ததுடன், அதுபற்றி பங்காளிக் கட்சிகள் தமது கருத்தையும் பதிவுசெய்தன.

இதுமுடிந்து சில நாட்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் விக்னேஸ்வரனின் இல்லத்தில் கூடி ஓரணியாக தேர்தலை எதிர்கொள்வது குறித்து பேசினார்கள். தமிழரசின் தலைவர் மாவையும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்.

இந்தச் செய்திகள் வெளிவந்த சில நாட்களில் தமிழரசின் அரசியல்குழு மெய்நிகர் வழியாக கூடியது. அந்தக் கூட்டத்தின் பின்னர், ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளித்த கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், (அவர் தமிழரசுக்கும் பேச்சாளரா என்பது தெரியவில்லை) அப்படி கூட்டமைப்புக்கு வெளியே இருக்கும் கட்சிகளுடன் தேர்தலில் கூட்டணி அமைக்கமாட்டோம் என்று கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகப் பதிலளித்தார்.

அவரின் இந்த பதில் வெளிவந்ததும், அரசியல் குழுவின் உறுப்பினரும், தமிழரசின் கொழும்புக்கிளை தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, அப்படியொரு தீர்மானமே அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவில்லை என்று பதிலறிக்கை வெளியிட்டார்.

அவரின் பதிலறிக்கை வெளிவந்த மறுநாள், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழரசின் சிரேஷ்ட துணைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 கட்சிகள் மட்டுமே இணைந்து போட்டியிடுவதான தீர்மானம் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டமை உண்மைதான் என தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒன்று வந்தால் தமிழரசுக் கட்சி மட்டும் தனித்து போட்டியிடுவதா என்ற விடயம் ஆராயப்பட்டபோதே இந்த விடயமும் தீர்மானமாக கூறப்பட்டது என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

அவரின் தகவலின்படி தமிழரசு கட்சி மாத்திரம் தனித்துப் போட்டியிடுவதில்லை என்றும், கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் போட்டியிடுவது என்றே தீர்மானித்திருக்கின்றன.

ஆனால், அந்த கூட்டத்தில் கூட்டமைப்புக்கு வெளியே உள்ள மற்றைய கட்சிகளை சேர்ப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டதா? என்று சிவஞானம் ஐயாவிடம் ஊர்க்குருவி கேட்டபோது, அந்த விடயமே பேசப்படவில்லை. கூட்டமைப்பாக போட்டியிடுவதா கூட்டாக போட்டியிடுவதா என்றால் கூட்டமைப்பாக போட்டியிடுவது என்றுதான் முடிவெடுக்கப்பட்டது என்றார்.

ஆக, கூட்டமைப்பாக போட்டியிடுவது என்றால், மற்றைய கட்சிகளும் கூட்டமைப்பில் இணைந்தால் ஒன்றாகக் கூட்டமைப்பாக போட்டியிடலாம் என்பதுதானே அதன் பொருள்?

இப்போது தமிழரசின் தலைவர் மாவை, கடைசியாக ஊடக மாநாடு நடத்தி விளக்கமளித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிற கட்சிகள் இணைப்பதை பற்றி இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயல்குழுவில் தீர்மானிக்கப்படவில்லை என்று விளக்கமளித்துள்ள மாவை, தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளை இணைத்து, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் யோசனை தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்கள் அனைவரும் இணைந்து இறுதித் தீர்மானத்தை எடுப்பார்கள் எனவும் கூறியிருக்கிறார்.

ஆக, உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசு தனித்துப் போட்டியிடுவதில்லை என்று திட்டவட்டமாக முடிவெடுத்துவிட்டது. அதேவேளை கூட்டமைப்பாக தற்போதுள்ள கட்சிகளுடன் போட்டியிடுவது என்றும் முடிவெடுத்துவிட்டது. ஆனால், கூட்டமைப்புக்கு வெளியே உள்ள கட்சிகளை கூட்டமைப்பிற்குள் உள்வாங்கி எல்லோரும் ஓரணியாக கூட்டமைப்பாக போட்டியிடுவது குறித்து இனிமேல்தான் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் முடிவெடுக்க இருக்கின்றனர். அதாவது மாவை, செல்வம், சித்தார்த்தன் ஆகிய மூன்று தலைவர்களும் கூடி ஆராய்ந்து முடிவெடுக்கவிருக்கின்றனர்.

அப்படியெனில், கூட்டமைப்பின் தற்போதைய பங்காளிக் கட்சிகள் தவிர்ந்த மற்றைய கட்சிகளை கூட்டமைப்பில் சேர்ப்பது பற்றி அன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்படவில்லை என்பதுதான் அதன் பொருள்.

அப்படியெனில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோவை தவிர மற்றைய கட்சிகளுடன் தேர்தல் உடன்பாட்டிற்கு செல்வதில்லை என்று தமிழரசு மத்தியகுழு முடிவெடுத்தது என்று சுமந்திரன் சொன்ன தகவலும் சரியானதுதான். அதாவது தேர்தல் உடன்பாட்டுக்கு செல்வதில்லை என்று முடிவெடுக்கப்பட்டதே தவிர, கூட்டமைப்பிற்குள் அவர்களை உள்வாங்குவது பற்றி முடிவெடுக்கப்படவில்லை.

சுமந்திரன் என்ன சொன்னாலும் அதனை மறுக்கவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் சொல்லியிருப்பது இதுதான்.

இரண்டு பேர் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் மேசை முன்னால் ஒரு தண்ணீர் போத்தல் வைக்கப்பட, அங்கே இருந்த இருவரில் ஒருவரான ஊர்க்குருவி அதில் அரைவாசி தண்ணீரைக் குடித்துவிட்டு, போத்தலை மேசையில் மீது வைத்துவிடுகிறார்.

அப்போது, இந்த ஊர்க்குருவி தண்ணீர்ப் போத்தலில் அரைவாசியை குடித்துவிட்டார் என்று சொல்வதும், ஊர்க்குருவி அரைவாசியை மற்றவர்களுக்காக வைத்திருக்கிறார் என்று சொல்வதும் சரியானதுதானே.

ஆனால், கட்சியின் முக்கியமான ஒரு கூட்டம் பற்றிய செய்தியை இப்படி கட்சிக்காரர்களே வெவ்வேறு விதமாக மக்களை குழப்பிக்கொண்டிருப்பது நமது அரசியலுக்கு ஆரோக்கியமானது அல்ல.

**- ஊர்க்குருவி**

# மின் கட்டணத்தை உயர்த்தும் திட்டத்தை குப்பைத் தொட்டிக்குள் போடவேண்டும்!

## மின் பொறியியலாளர்கள் சங்கம் கோரிக்கை



கொழும்பு, ஜன. 04

சட்டத்திற்கு முரணாக அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட மின்சார கட்டணத்தை உயர்த்தும் பிரேரணையை குப்பைத் தொட்டியில் வீசுமாறு மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளது.

அத்தோடு தற்போதுள்ள அமைச்சரை நீக்கிவிட்டு அனைவருக்கும் வேலை செய்யக்கூடிய மின்சாரத்துறை அமைச்சரை நியமிக்குமாறும் சங்கத்தின் தலைவர் நிஹால் வீரரத்ன கோரியுள்ளார்.

அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட மின் கட்டண உயர்வு யோசனை, பலரது ஆட்சேபனை காரணமாக ஒரு வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீண்டும் அமுல்படுத்த முயற்சி மேற்கொண்டால் போராட்டங்கள் தொடரும் என்றும் அவர் எச்சரித்தார். (அ)

# தினேஷ் ஷாப்டரின் மரணம் 140 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஜன. 04

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இதுவரை 140 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மனித கொலைகள் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

தினேஷ் ஷாப்டர் மீட்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட இரத்த மாதிரிகள் உள்ளிட்ட ஆதாரங்களை மரபணு பரிசோதனைக்காக அரச இராசயன பகுப்பாய்வாளருக்கு அனுப்ப கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

இதற்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு இணங்க தினேஷ் ஷாப்டரின் இரத்த மாதிரி, நகங்கள் உள்ளிட்ட உடற்கூறுகள் மற்றும் சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் தொடர்பில் மரபணு பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

(அ)

# யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே மேலதிகமாக 33 பஸ்கள் சேவையில்!

யாழ்ப்பாணம், ஜன. 04

கொழும்பில் இருந்து வடக்கு மாகாணத்துக்கான புகையிரத சேவைகள் எதிர்வரும் 5ஆம் திகதியுடன் அனுராதபுரத்துடன் மட்டுப்படுத்தப்படவுள்ள நிலையில் , யாழ்ப்பாணம்-கொழும்பு பஸ் சேவைக்காக மேலதிகமாக 33 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை, வவுனியா - அனுராதபுரம் பாதை திருத்த வேலை காரணமாக குறைந்தது ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தப்படுகின்றது .

அதனால் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை,தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, ரயில் திணைக்களத்தினருடன் இணைந்து சில மாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது.

அந்த வகையில் குறிப்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்துச் சபை, ரயில் திணைக்களம், வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் இணைந்து என்ன மாற்றங்களைச் செய்யலாம் என்பதை தீர்மானித்து மூன்று வகையான தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் யாழ் ராணி தற்போது முறிகண்டி வரை பயணிக்கின்றது. அதை வவுனியா வரை செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

வவுனியாவில் இருந்து அனுராதபுரம் சென்று ரயிலில் கொழும்பு செல்ல விரும்புவோருக்காக வவுனியா - அனுராதபுரத்திற்கு இடையே 20 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபட உள்ளன.

2. தனியார் போக்குவரத்துச் சேவை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அந்தந்த மாவட்டத்தில் இருந்து நேரடியாக அனுராதபுரத்துக்கு சென்று அங்கே பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியவாறு ஒழுங்கு செய்திருக்கின்றோம்.

நேரடியாக பஸ்களில் கொழும்புக்கு செல்லக்கூடியவாறான ஏற்பாடுகளும் செயற்படுகின்றன. குறிப்பாக நேரடியாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பல குளிரூட்டப்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

தற்போது 38 பஸ்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து நேரடியாக கொழும்புக்கு சேவையில் ஈடுபடுகின்றன.

அதை விட மேலதிகமாக 33 குளிரூட்டப்பட்ட பஸ்கள் இருக்கின்றன. அந்த பஸ்களும் தற்போது கடந்த கால கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சேவைகள் ஈடுபடவில்லை. அந்த 33 பஸ்களையும் மீண்டும் சேவையில் ஈடுபடுமாறு அதனோடு தொடர்புடையவர்களை கோரியுள்ளோம் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
04.01.2023 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பரந்துபட்ட கூட்டமைப்பிற்கான கோரிக்கை?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய கட்சிகளையும் உள்ளடக்கி, கூட்டமைப்பை பரந்துபட்ட கூட்டமைப்பாக மாற்றியமைக்குமாறு சம்பந்தனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது. இது புதிய விடயமில்லாவிட்டாலும் கூட, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் டி.பி.எல்.எப் (புளொட்) ஆகிய கட்சிகளின் தலைவர்கள், கூட்டாக சம்பந்தனிடம் கடிதம் மூலம் கோரியிருக்கின்றனர். இலங்கை தமிழரசுக் கட்சியினர் மத்தியில் தனியாக செல்லவேண்டுமென்னும் கோரிக்கைகள் வலுவடைந்துவரும் நிலையில்தான், இவ்வாறானதொரு கோரிக்கையை பங்காளிக் கட்சிகள் முன்வைத்திருக்கின்றன. இதற்கு சம்பந்தனின் பதில் என்னவாக இருக்குமென்பதற்கப்பால், சம்பந்தனின் பதில் சாதகமாக அமையாவிட்டால் பங்காளிக் கட்சிகள் என்ன செய்ய முயற்சிக்கும்? புதியதொரு கூட்டணியாக செயலாற்றுமா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான உரித்தை தங்கள் வசப்படுத்த முயற்சிக்குமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்யவேண்டுமென்னும் கோரிக்கைகள் கடந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட போதும்கூட, சம்பந்தன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு சம்பந்தன் பக்கத்திலிருந்த பதில் – ஏனைய கட்சிகள் காலவோட்டத்தில் தாக்குப்பிடிக்கக்கூடும் நிலையிலில்லை. அவ்வாறான உதிர்ந்து போகப் போகும் கட்சிகளுக்கு உயிர்கொடுக்கும் வேலையை தமிழரசுக் கட்சி செய்யக்கூடாதென்னும் கருத்தும் கட்சியின் உயர்மட்டத்தினர் மத்தியில் இருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில்தான் சம்பந்தன் கூட்டமைப்பை பதிவு செய்யும் கோரிக்கையை ஆரம்பத்திலிருந்தே நிராகரித்து வருகின்றார். இவ்வாறானதொரு சூழலில்தான், வெளியேறிய கட்சிகளை மீளவும் உள்வாங்கி, கூட்டமைப்பை பரந்துபட்டதொரு கூட்டமைப்பாக மாற்ற வேண்டுமென்னும் கோரிக்கையை பங்காளிக் கட்சிகள் முன்வைக்கின்றன.

கடந்த தேர்தல் அனுபவத்திலிருந்து நோக்கினால், கூட்டமைப்புக்குள் அனைவரையும் உள்வாங்கிக் கொள்வது ஆரோக்கியமானதொரு அணுகுமுறைதான். ஏனெனில், பிளவுற்றால் தமிழ் மக்களுக்கான ஆசனங்களை ஓரிடத்தில் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் போகும். இன்றைய நிலையில், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்தும் முடிந்தவரை ஓரிடத்தில் நிற்க வேண்டியது அவசியம். ஆனால் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நோக்கினால், இவ்வாறான நகர்வுகள் எங்கு தோல்வியில் முடிந்தது என்பதையும் கட்சிகள் திரும்பிப்பார்க்கவேண்டும். தேர்தலில் ஆசனக் கணக்கு போடுவதால்தான் இவ்வாறான நகர்வுகள் தோல்வியில் முடிகின்றன. தமிழரசுக் கட்சியினரை பொறுத்தவரையில், கூட்டமைப்பிலிருக்கும் ஏனைய கட்சிகளால் தனித்துத் தேர்தலை எதிர்கொள்ள முடியாதென்னும் நம்பிக்கை ஆழமாக வேர் கொண்டிருக்கின்றது.

இதற்கு ஒரு வலுவான காரணமும் உண்டு. அதாவது, தமிழரசுக் கட்சி தவிர்ந்த கட்சிகள் எவையுமே, வடக்கு கிழக்கில் பரவலான ஆதரவுத் தளத்தை கொண்டிருக்கவில்லை. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் அனைத்துமே பெரும்பாலும் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டே இயங்குகின்றன. தமிழரசுக் கட்சி ஒன்றுதான், வடக்கு–கிழக்கு முழுவதும் இயங்கும் ஒரேயொரு கட்சியாகும். ரெலோ மட்டும் இதில் சற்று விதிவிலக்கு. ஆனால் அவர்களும் தமிழரசுக் கட்சியுடன் இருக்கின்ற காரணத்தில்தான் வெற்றி பெற முடிகின்றதென்றே தமிழரசுக் கட்சியினர் நம்புகின்றனர். இதற்கும் ஒரு காரணமுண்டு. அதாவது, பங்காளிக் கட்சிகளும் இதுவரையில் தங்களின் சொந்த பலமென்ன என்பதை எந்தவொரு தேர்தலிலும் நிரூபிக்கவுமில்லை. இவ்வாறானதொரு நிலையில் பங்காளிக் கட்சிகளின் கோரிக்கை சம்பந்தனால் மறுக்கப்பட்டால் – தமிழரசுக் கட்சியினரால் மறுக்கப்பட்டால் – அடுத்தது என்னவென்னும் கேள்வியுண்டு. இதற்கான பதிலில்லாமல் சம்பந்தனை நோக்கி கோரிக்கைகளை முன்வைப்பது பெரியளவில் நன்மையளிக்காது.

# அரசியல் திறமையற்றவர்கள் என்னை விமர்சிக்கின்றார்கள்

## பொன்சேகா, அனுரகுமாரவுக்கு சஜித் பதிலடி

கொழும்பு, ஜன. 04

பாடசாலைகளுக்கு பஸ்களை நன்கொடையாக வழங்கும் எனது முயற்சியை விமர்சிப்பவர்கள் அரசியல் ரீதியாக தகுதியற்றவர்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பதிலடி கொடுத்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ பாடசாலைகளுக்கு பஸ்களை வழங்குவதை அண்மையில் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் விமர்சித்திருந்தனர்.

அநுரகுமார திஸாநாயக்க, சஜித்தை ‘பஸ் மேன்’ என்று அழைத்தார். பஸ்களை ஓட்டுபவர்களும் பஸ்களை எரிப்பவர்களும் நாட்டை ஆளுவதற்கு பொருத்தமானவர்கள் அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்தார்.

இது குறித்து சஜித் நேற்று தெரிவிக்கையில் -

என்னை விமர்சிப்பவர்கள் என் மீது பொறாமைப் படுகிறார்கள் பாடசாலைகளுக்கு பஸ் களை நன்கொடையாக வழங்கும் எனது முயற்சியை திறமையற்றவர்கள் மட்டுமே விமர்சிக்கின்றனர். இது வெறுமனே பாடசாலைகளுக்கு பஸ்களை நன்கொடையாக வழங்குவது மட்டுமல்ல, மறைந்த சி. டபிள்யூ.டபிள்யூ. கங்காரவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியின் விரிவாக்கமாகும்.

என்னைக் குறை கூறுபவர்கள் இந்த வேலையை முன்னெடுத்துச் செல்வதற்கு என்னுடன் வந்து சேருமாறு நான் அழைக்கிறேன் - என்றார்.

# ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு; காத்தான்குடியில் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, ஜன. 04

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பில் இருந்த இருவருடன், தொடர்புகளை பேணிய குற்றச்சாட்டில் காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடைய குறித்த சந்தேகநபரை நேற்றுமுன்தினம் இரவு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவில் கோயம்புத்தூரில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடையவராக சந்தேகிக்கப்படும் ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோர் கடந்த டிசெம்பர் 29 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர்.

இந்த சந்தேகநபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் குற்றவியல் சதித் திட்டத்தில் ஈடுபட்டதுடன், இலங்கையில் 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் ஸஹ்ரான் ஹாஷிமுடன் தொடர்பில் இருந்ததாக தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தியர்களுடன் காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடைய உவர் லெப்பை அஹமட் நுஸ்கீன் பேஸ்புக்கில் தொடர்புகளை பேணி வந்துள்ளதாக இந்திய புலனாய்வுப் பிரிவின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை புலனாய்வு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதற்கு இணங்க, காத்தான்குடி பழைய கல்முனை வீதி எம்.பி.சி.எஸ். குறுக்கு வீதியைச் சேர்ந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (அ)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 114 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, ஜன. 04


கொக்கலை ஏற்றுமதி செயலாக்க வலயத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஊழியர்கள், உணவு விசமானதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த தொழிற்சாலையின் ஊழியர்களுக்காக நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற மாநாட்டில் வழங்கப்பட்ட உணவு விசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 114 எனவும், அவர்கள் அனைவரும் பெண்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் 30 பேர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 04 புதன்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : திரையோதசி




**மேடம்**
கவனமுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட சிக்கல் தீரும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும்.

**இடபம்**
எண்ணம்போல் செயல்படுவீர்கள். வேலை வாய்ப்பிற்காக காத்திருந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். உங்கள் முயற்சியில் இருந்து வந்த தடை விலகும். வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்**
நிதானமாகச் செயல்பட்டுவீர்கள். வரவை விட செலவு அதிகரிக்கும். குடும்பத்தினர் ஆசையை நிறைவேற்றுவீர்கள். ஒரு சிலர் கோயிலுக்கு செல்வீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

**கடகம்**
வருமானத்தில் இருந்து வந்த தடை விலகும். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பொருளாதார நிலை அதிகரிக்கும். புதிய நண்பர்களால் ஆதாயம் காண்பீர்கள்.

**சிம்மம்**
உங்கள் கோரிக்கை நிறைவேறும். நிதிநிலை உயரும். செல்வாக்கு அதிகரிக்கும். லாபமான நாள். தொழிலில் இருந்து வந்த தடை விலகும். உங்கள் செயல் லாபத்தை ஏற்படுத்தும்.

**கன்னி**
குடும்ப நலனுக்காக மேற்கொள்ளும் ஒரு முயற்சி லாபமாகும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தீராமல் இருந்து வந்த ஒரு பிரச்னை நண்பர்கள் உதவியுடன் முடிவிற்கு வரும்.

**துலாம்**
அமைதி காக்க வேண்டிய நாள். செயல்களில் தாமதம் ஏற்படும். மனதில் குழப்பம் ஏற்படும். யோசித்து செயல்பட நன்மை ஏற்படும். எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். குழப்பத்தால் தடுமாற்றம் அடைவீர்கள்.

**விருட்சிகம்**
பணவரவு அதிகரிக்கும். திருமண வயதினருக்கு வரன் குறித்த தகவல் வீடு தேடி வரும். கூட்டுத்தொழில் முயற்சி லாபம் தரும். உங்கள் ஆலோசனையை நண்பர்கள் ஏற்பார்கள்.

**தனுசு**
உங்கள் திறமை வெளிப்படும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். பணி இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அதற்குரிய வாய்ப்பு உண்டாகும்.

**மகரம்**
சேமிப்பில் கவனம் தேவை. பிள்ளைகள் நலனில் அக்கறை அதிகரிக்கும். நிதி நிலை சீராகும். பணியாளர்களுக்கு மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
செயலில் தடுமாற்றம் ஏற்படும். கவனக்குறைவால் தொழிலில் கஷ்டத்தை சந்திப்பீர்கள். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பம் வரும். வார்த்தைகளில் கவனம் தேவை.

**மீனம்**
இருப்பிடத்தை மாற்றம் செய்வீர்கள். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

# திருப்பதி வரலாற்றில் முதல்முறையாக ஒரே நாளில் ரூபா 7.68 கோடி வருமானம்

*சென்னை, ஜன. 04*

*வைகுண்ட ஏகாதசியையொட்டி திருப்பதியில் நேற்று முன் தினம் நள்ளிரவு 12.05 மணி அளவில் சிறப்பு பூசைகள் செய்து சொர்க்கவாசல் திறக்கப்பட்டது.*

*பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்த முன்னாள் முதலமைச்சர்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், நீதிபதிகள், முதன்மைச் செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் சொர்க்கவாசல் வழியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.*

*காலை 5 மணி முதல் 6 மணி வரை ஸ்ரீ வாணி அறக்கட்டளை தரிசன ரிக்கெட் பெற்ற பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதையடுத்து ரூ.300 ஒன்லைன் தரிசன ரிக்கெட் மற்றும் இலவச தரிசன ரிக்கெட் பெற்றவர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.*

*தினமும் 80 ஆயிரம் பக்தர்கள் சொர்க்கவாசல் வழியாக தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இதற்காக ரூ.300 ஒன்லைன் தரிசன ரிக்கெட்டில் 20 ஆயிரம் பேரும், இலவச தரிசன ரிக்கெட்டில் 50 ஆயிரம் பேரும், ஸ்ரீவாணி அறக்கட்டளையின் சார்பில் 2 ஆயிரம் பேர் என மொத்தம் 8 லட்சம் ரிக்கெட்டுகள் விநியோகிக்கப்படுகிறது.*

*இந்த நிலையில் வைகுண்ட ஏகாதசி முதல் நாளான நேற்று முன் தினம் இலவச தரிசன ரிக்கெட் மற்றும் பல்வேறு சேவை ரிக்கெட்களை பெற்ற 13 ஆயிரம் பக்தர்கள் தரிசனத்திற்கு வரவில்லை. 13 ஆயிரம் பேர் தரிசனத்திற்கு வராததால் தள்ளு முள்ளு இன்றி பக்தர்கள் தரிசனம் செய்தனர்.*

*நேற்று நாடு முழுவதிலிருந்து ஏராளமான முக்கிய பிரமுகர்கள் தரிசனம் செய்ததால் முன்பு எப்போதும் இல்லாத வகையில் திருப்பதி வரலாற்றில் முதல்முறையாக ஒரே நாளில் ரூ.7.68 கோடி உண்டியல் வருமானமாக கிடைத்தது.*

*69,414 பேர் தரிசனம் செய்தனர். 18,612 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். இதற்கு முன்பு ஒரே நாளில் அதிகபட்சமாக ரூ.6 கோடிக்கு மேல் உண்டியல் வருமானம் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.* *(அ)*

# தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியை கைப்பற்ற காய் நகர்த்துகிறார் கார்த்தி!

*சென்னை, ஜன. 04*

*தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியை கைப்பற்ற, 'காய்' நகர்த்தி வரும் கார்த்தி சிதம்பரம், புத்தாண்டு தினத்தன்று ராகுல், பிரியங்காவிடம் தொலைபேசியில் பேசிய தகவல் வெளியாகி உள்ளது.*

*கிறிஸ்மஸ், புத்தாண்டு தின விழாவை ஒட்டி, ராகுல் நடைபயணத்திற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மீண்டும் நடைபயணத்தை, நாளை துவங்குகிறார். டில்லியில் தங்கியிருந்த ராகுல், பிரியங்காவை சந்தித்து, புத்தாண்டு வாழ்த்து சொல்லவும், மாநில தலைமை பதவி குறித்து பேசவும் கார்த்தி சிதம்பரம் விரும்பினார். ஆனால், யாரையும் சந்திக்க ராகுல், பிரியங்கா அனுமதிக்கவில்லை.*

*இதையடுத்து, புத்தாண்டு வாழ்த்து தெரிவிக்கும் பூங்கொத்துகளை, அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின், தொலைபேசியில் ராகுலிடம், 17 நிமிடங்களும் பிரியங்காவிடம் 20 நிமிடங்களும் கார்த்தி சிதம்பரம் பேசியுள்ளார்.*

*கார்த்தி பேசியது குறித்து, கட்சி வட்டாரங்கள் கூறியதாவது:*

*கிறிஸ்மஸ் விழாவுக்கு முன், டில்லியில் காங்., தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அதில், 'கையோடு கைகோருங்கள்' நிகழ்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டது. அக்கூட்டத்தில், தமிழக காங்., தலைவர் அழகிரி பங்கேற்றார்.*

*பின் அவர், 'அனைத்து பொறுப்புகளும் மாற்றத்துக்குரியது. தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியை மாற்றினால், ஏற்றுக் கொள்வோம். அனைவரின் கடமை கட்சி பணி செய்வதே' என்றார்.*

*அழகிரி சென்னை திரும்பியதும், மாநில தலைவர் பதவியை கைப்பற்றும் முயற்சிக்காக, கார்த்தி சிதம்பரமும் டில்லி சென்றார்.*

*அங்கு ராகுல், பிரியங்காவிடம் தொலைபேசி வாயிலாக, தமிழக அரசியல் நிலவரம், தி.மு.க., கூட்டணி குறித்து விவாதித்துள்ளார். பின், மாநில தலைவர் பதவி தந்தால், தன் சொந்த பணத்தை கட்சிக்கு செலவு செய்வதாகவும், தமிழகத்தில் காங்கிரஸ் இழந்த செல்வாக்கை மீட்பதாகவும், உறுதி அளித்துள்ளார்.*

*காங்கிரஸ் எம்.பி., ஜோதிமணி, எம்.எல்.ஏ., விஜயதாரணி ஆகியோரும், தமிழக காங்., தலைவர் பதவிக்கு குறி வைத்து, காய் நகர்த்தி வருகின்றனர்.* *(அ)*

# தி.மு.க ஏழை மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை

## பழனிசாமி குற்றச்சாட்டு



*சென்னை, ஜன. 04*

*திமுக ஏழை மக்களுக்கு எது வும் செய்யவில்லை. ஏழை மக்களுக்கு மேலும் பல திட்டங்களை அதிமுக செய்யும் என அதிமுக இடைக்கால பொதுச்செயலாளர் பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.*

*கள்ளக்குறிச்சியில் அதிமுக சார்பில் நரிக்குறவர் சமுதாய மக்களுக்காக 20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட இலவச குடியிருப்பு வீடுகளை அதிமுக இடைக்கால பொதுச் செயலாளர் பழனிசாமி திறந்து வைத்தார்.*

*இதையடுத்து, அவர் பேசியதாவது:-*

*ஏழை எளிய மக்களுக்கான உண்மையான கட்சி அதிமுக எனும் மாபெரும் மக்கள் இயக்கம் தான். விளிம்பு நிலையில் இருக்கம் நரிக்குறவர் இன மக்களின் குழந்தைகளின் படிப்புகாக பாடுபட்டுவருவதும் அதிமுக மட்டும் தான். திமுக ஏழை மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. ஏழை மக்களுக்கு மேலும் பல திட்டங்களை அதிமுக செய்யும்-என்றார்.* *(அ)*

# போதைப்பொருளை ஒழிப்பு; முதலமைச்சர் ஆலோசனை



*சென்னை, ஜன. 04*

*தமிழகத்தில் போதைப் பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோ சனை நடைபெற்றது.*

*சென்னை தலைமைச் செயலகத்தில் நடை பெறும் ஆலோசனையில் டி.ஜி.பி சைலேந்திர பாபு உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.*

*போதைப் பொருள் கடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக முக்கிய முடிவு எடுக்க வாய்புள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.*

*மேலும், இலங்கையில் இருந்து தப்பித்து வந்த போதைப் பொருள் கும்பல் தமிழகத்தில் ஊடுருவி உள்ளதாக தகவல் வெளியான நிலையில் அதுகுறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.* *(அ)*

ஈழநாடு



# நாடு தழுவிய ரீதியில் நாளை மருத்துவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 04

நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாளை நாடு தழுவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளிலும் எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டமானது வரவு-செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நியாயமற்ற வரி அறவீட்டுத் திட்டத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டு முன்னெடுக்கப்படவுள்ளதாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் குறிப்பிட்டனர். (அ)

# வீட்டு மின் கட்டண பட்டியல் முறையாக கிடைக்கவில்லை

## கட்டணம் செலுத்தாமைக்கு இதுவே காரனம் என்கிறார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஜன. 04

தனது வீட்டு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்ட தாமதத்துக்கு காரணம் முறையாக மின் கட்டணப் பட்டியல் கிடைக்காததே என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மின் கட்டணம் உரிய முறையில் கிடைக்கப்பெற்றவுடன் அதனை நிலுவைத் தொகையுடன் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ததாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இரவு தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார். (அ)



# 719,978 சுற்றுலா பயணிகள் 2022 இலங்கைக்கு வருகை!

கொழும்பு, ஜன. 04

2022 ஆம் ஆண்டில் மொத்தம் 7 இலட்சத்து 19 ஆயிரத்து 978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.



இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டிசெம்பர் மாதத்தில் 91 ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

ரஷ்யாவிலிருந்து 19 ஆயிரத்து 963 சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவிலிருந்து 17 ஆயிரத்து 350 பேரும், இங்கிலாந்திலிருந்து 7 ஆயிரத்து 879 பேரும், அவுஸ்ரேலியாவிலிருந்து 5 ஆயிரத்து 158 பேரும், ஜேர்மனியைச் சேர்ந்த 4 ஆயிரத்து 984 நபர்களும் இவர்களில் உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து அதிகமாக ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து நான்கு பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (அ)

# புலிகளுடன் தொடர்பில்லை நான் ரணிலின் ஆதரவாளன்

## சென்னை மேல் நீதிமன்றில் ஒருவர் மனு

சென்னை, ஜன. 04

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை புதுப்பிக்க போதைப்பொருள் மற்றும் ஆயுதங்களை கடத்தியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை மேல் நீதிமன்றில் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு விரைவில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.**

இலங்கையில் பிறந்து, 2003 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சென்று, தற்போது திருச்சி அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஒருவர் தாக்கல் செய்த மனுவே விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படவுள்ளது.

இவருக்கு எதிராக கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி இந்திய புலனாய்வுப் பிரிவு வழக்கை தாக்கல் செய்துள்ளது.

இந்த நிலையில் மத்திய அரசின் அதிகாரி ஒருவர் வழங்கிய தகவலின் பேரிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே அதனை ரத்துச் செய்யவேண்டும் என்றும் குறித்த பொதுமகன் சென்னை நீதிமன்றை கோரியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என்று குறிப்பிட்டுள்ள மனுதாரர், தாம் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே தம் மீது போதைப்பொருள் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் 2020 ஆண்டிலும் தம்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அந்த வழக்கு தொடர்வதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார். (அ)

# மரத்தில் மோதிய மோ.சைக்கிள் தந்தையும் மகனும் உயிரிழப்பு!

கட்டுவன, ருக்மல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தந்தை மற்றும் மகன் இருவர் உயிரிழந்துள்ளனர் என கட்டுவன பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தரான 27 வயதுடைய விஜயமுனிகே கிரிஷான் ஜயலத் மற்றும் அவரது தந்தை விஜயமுனிகே தர்மசேன, 61 வயது ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த தந்தை மற்றும் மகன் இருவரும் வீரகெட்டிய அபகொலவெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

அபகொலவெவ பிரதேசத்திலிருந்து ஊருபொக்க பிரதேசத்துக்கு சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளின் பிரேக் பழுதடைந்ததன் காரணமாக வீதிக்கு அருகில் இருந்த மரத்தில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்திருக்க லாம் என சந்தேகிக்கப்படு வதாக பொலிஸார் தெரிவித் தனர்.

காயமடைந்தவர்கள் கட்டுவன மற்றும் எம்பிலிபிட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர். (அ)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைவஸ்து விற்றவர் கைது!

கொழும்பு, ஜன. 04

பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு தயார்ப்படுத்தப்பட்ட போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் வெல்லம்பிட்டி பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

வெல்லம்பிட்டி மற்றும் சேதவத்தை ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரிடமிருந்து 80 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

62 வயதுடைய இந்த சந்தேக நபர் நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விநியோகம் செய்து வந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. (அ)

# மயங்கி விழுந்த பல்கலை மாணவன் திடீர் மரணம்!

கொழும்பு, ஜன. 04

கஹதுட்டுவ-தியகம தொழில்நுட்ப டிப்ளோமா பல்கலைக்கழக விடுதியில் மயங்கி விழுந்த மாணவன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

மாணவன் தனது அறையில் மயங்கி விழுந்து ஹோமாகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

தியகம தொழில்நுட்ப டிப்ளோமா பல்கலைக்கழ கத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் கட்டு கம்ப ளையைச் சேர்ந்த மலித் யசோதா என்ற 25 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார். (அ)

# ஷானி அபேசேகரவின் காரில் பாய்ந்த துப்பாக்கித் தோட்டா!

கொழும்பு, ஜன. 04

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்து இடைநிறுத்தப்பட்ட ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவின் கார் மீது பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷானி அபேசேகரவின் வீட்டில் பாதுகாப்பு கடமைக்காக அமர்த்தப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கைகளால் இந்தச் சம்பவம் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த காரிலேயே துப்பாக்கிச்சூடு காணப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றபோது ஷானி அபேசேகர வீட்டில் இல்லை எனவும், சம்பவம் தொடர்பில் கான்ஸ்டபிள் ஷானி அபேசேகரவிடம் தெரிவிக்க வில்லை எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஷானி அபேசேகர தனது கார் நிறுத்துமிடத்திற்கு சென்றபோது, எரிபொருள் கசிவு ஏற்பட்டதைக் கண்டறிந்ததை தொடர்ந்து, வாகனத்தைப் பரிசோதித்தபோது எரிபொருள் தாங்கிக்கு அருகில் தோட்டா பாய்ந்திருப்பதைக் கண்டுபிடித்தார்.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், வீட்டின் காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ்காரர் ஒருவரால் இந்த சம்பவம் நடந்துள்ளமை தெரியவந்தது.

ஷானி அபேசேகர, பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட காவலர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இச்சம்பவம் தவறுதலாக இடம்பெற்றதாக குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் விசாரணையின் பின்னர் தெரிவித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறின.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணை பொரளை பொலிஸாரினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஷானி அபேசேகரவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# ஓய்வு பெறும் வயதெல்லை தொடர்பில் மீண்டும் பேச்சு

கொழும்பு, ஜன. 04

தாதியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் ரயில் சாரதிகள் உள்ளிட்ட விசேட அரச ஊழியர்களின் ஓய்வூதியக் காலம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வது குறித்து பொது நிர்வாக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் சுமார் 30,000 அரச ஊழியர்கள் சேவைகளிலிருந்து ஓய்வு பெற்ற பின்புலத்தில் அமைச்சு இதனை கூறியுள்ளது.

சில விசேட துறைகளில் பணியாற்றும் அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதை குறைந்தபட்சம் 65 ஆக அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹப்புஹின்ன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் பொது நிர்வாக அமைச்சில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாகவும் எனினும் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது சுமார் 15 இலட்சம் அரச ஊழியர்கள் பணியாற்றுவதாக செயலாளர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# அரகலய போராட்டத்தின் பின்னணியில் சர்வதேச சதி

## எல்லே குணவன்ஸ தேரர் குற்றச்சாட்டு


கொழும்பு, ஜன. 04

**இலங்கையில் அரசாங்கத்துக்கு எதிரான அரகலய போராட்டத்தின் பின்னணியில் சர்வதேச சதி இருப்பதாக, தேசத்தை காக்கும் தேசிய அமைப்பின் தலைவர் வண. எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.**

போராட்டத்தை முன்னின்று நடத்துவதில் 'போர்ன் எகெய்ன்' என்ற குழு, பிரதான பங்குதாரராக செயற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போன் எகெய்ன் எனும் மதக் குழு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதுடன், சர்வதேச புலம்பெயர் அமைப்புகளும் காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டதாக எல்லே குணவன்ச தேரர் கூறினார்.

நாட்டை சீர்குலைக்க சர்வதேச சமூகம் விரும்பியதாகவும், போராட்டம் தொடங்கிய தருணத்திலிருந்து, ரோ மற்றும் சி.ஐ.ஏ புலனாய்வு சேவைகள் அதற்கு ஒரு பாரிய பங்களிப்பை சேர்த்ததாகவும் அவர் கூறினார்.



இரு புலனாய்வு சேவைகளும் ஒன்றாக இணைந்து இயங்கின.

1980 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வந்து அமெரிக்க கிறிஸ்தவத்தை ஆதரிக்கும் குழுக்களில் ஒன்றே போர்ன் எகெய்ன் என்றும், அது நாட்டை சீர்குலைப்பதில் பெரும் பங்காற்றியுள்ளதாக தற்போது தமக்கு தகவல் கிடைத்துள்ளதென எல்லே குணவன்ச தேரர் குறிப்பிட்டார்.

முழுப் போராட்டத்தையும் நடத்தியதில் கொரிய வம்சாவளியைச் சேர்ந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கும் பங்குண்டு. அவர் போராட்டத்தில் கண்ணுக்குத் தெரியாத கரமாக செயற்பட்ட போர்ன் எகெய்னின் உறுப்பினர் என்றும் தேரர் வலியுறுத்தினார்.

சர்வதேச படையெடுப்புகள், போராட்டத்தின் மூலம் நாட்டின் வளங்களை கொள்ளையடிக்கும் முயற்சி இடம்பெற்றதாகவும் எல்லே குணவன்ச தேரர் மேலும் தெரிவித்தார். (அ)

# விசர் நாயை வளர்த்த பிரான்ஸ் பிரஜை கைது

கொழும்பு, ஜன. 04

விசர் நோயால் பீடிக்கப்பட்டிருந்த நாய் ஒன்றை வளர்த்தார் என்ற குற்றச்சாட்டில் பிரான்ஸ் நாட்டு பிரஜையை தாம் கைது செய்ததாக அளுத்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

பெந்தோட்டை அங்காகொட ஸ்வர்ணபாய என்ற முகவரியில் வசித்து வந்த 84 வயதான எரிக் மார்ஷல் பேர்னாட் என்ற பிரான்ஸ் பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் 7 வயதான கொட்டேன் என்ற ரக நாய் ஒன்றை வளர்த்து வந்துள்ளார். இந்த நாய் கடந்த 23 ஆம் திகதி 5 பேரை கடித்துள்ளதுடன் மூன்று நாய்களையும் கடித்துள்ளது.

பிரான்ஸ் பிரஜை வளர்த்த அந்த நாய் கடந்த 26 ஆம் திகதி இறந்து போயுள்ளது. இதனையடுத்து நாயின் தலையை பொரளையில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி பரிசோதனை செய்த போது, நாய்க்கு விசர் நோய் ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாய் கடிக்கு உள்ளான அளுத்கமை களுவாமோதர பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பிரான்ஸ் பிரஜையை பொலிஸார் கைது செய்தனர். (அ)

# எரிபொருள் நிலையத்தில் ரூபா 2 இலட்சம் கொள்ளை

கொழும்பு, ஜன. 04

இரத்தினபுரி திருவெனா கெட்டிய பிரதேசத்தில் உள்ள கோனகும்புர எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர்களை இனந்தெரியாதோர் தாக்கி இரண்டு இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இரு இனந்தெரியாத நபர்கள் கடந்த 31 ஆம் திகதி அதிகாலையில் எரிபொருள் நிலையத்துக்கு வந்து அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை பொல்லினால் தாக்கி ஊழியர் ஒருவரின் கையை கத்தியால் வெட்டி காயப்படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் அவ்விருவரும் ஊழியர்களை பயமுறுத்தி இரண்டு இலட்சம் ரூபாவுக்கும் அண்மித்த பணத்தை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் உள்ள சி.சி.ரி.வி கமராவில் கொள்ளையடிக்கும் சம்பவம் பதிவாகியுள்ளதாக தெரிவித்த பொலிஸார், சந்தேக நபர்களை கைது செய்ய ஆரம்பகட்ட விசாரணைகள் இடம்பெற்று வருவதாக கூறினர். (அ)

# மின் கட்டண உயர்வுக்கு எதிராக மக்களின் கையெழுத்து திரட்டல்





கொழும்பு, ஜன. 04

மின் கட்டணம் அதிகரிப்பு குறித்த பொதுமக்களின் கரிசனைகளும் சீற்றங்களும் அதிகரிக்கின்றன.

உத்தேச மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக மின் பாவனையாளர்கள் சங்கம் 6.9 மில்லியன் பாவனையாளர்களின் கையெழுத்தை சேகரிக்கும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

மாத்தறை மற்றும் காலியில் முதலாம் திகதி ஆரம்பமான இந்த போராட்டம் நேற்று முன் தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் இடம்பெற்றது.

நாளை மறுதினம் நாடாளாவிய ரீதியில் இந்த போராட்டம் இடம்பெறும்.

முதலாம் திகதி மாத்திரம் பத்தாயிரம் கையெழுத்துக்கள் பெறப்பட்டன என மின்சாரம் நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக தெரிவித்தார்.

அமைச்சர் காஞ்சன விஜய சேகரவின் சொந்த ஊரான மாத்தறையில் நாங்கள் கையெழுத்து போராட்டத்தை ஆரம்பித்தோம்.

காலியிலும் கையெழுத்துக்களை பெற்றோம். முதலாம் திகதி பத்தாயிரம் கையெழுத்துக்களை பெற்றோம். இரண்டாம் திகதி களனி விகாரையின் முன்பாக கையெழுத்துக்களை சேகரித்தோம். மதியத்திற்குள் 3500 கையெழுத்துக்களை சேகரித்தோம். காலிமுகத்திடலிலும் கொழும்பு ரயில் நிலையத்தின் முன்பாகவும் கையெழுத்துக்களை சேகரித்தோம்-என்றார். (அ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற் THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# முட்டை இறக்குமதியால் வைரஸ் தொற்று வரலாம்

## கால்நடை வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 04

முறையான கட்டுப்பாடுகளின்றி முட்டைகளை இறக்குமதிசெய்தால் இலங்கைக்கு ஏவியன் இன்புளுவன்ஸா எனும் வைரஸ் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதால் அமைச்சரவையின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று ஊடக சந்திப்பில் உரையாற்றிய அரச கால்நடை வைத்தியர் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சிசிர பியசிறி, இந்த நடவடிக்கையானது நாட்டுக்கு பறவைக் காய்ச்சல் அபாயத்தை ஏற்படுத்தும்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை, கால்நடை அறுவை சிகிச்சை நிபுணர்கள், கால்நடை புலனாய்வு அதிகாரிகள் மற்றும் கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து வைரஸைத் தடுக்க எடுத்த கூட்டு முயற்சிகள், அரசாங்கத்தின் இந்த இறக்குமதி தீர்மானத்தினால் பாதாளத்துக்கு போய்விடும்-என்றார்.

இதேவேளை, முட்டையை இறக்குமதி செய்வதற்கான அமைச்சரவையின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு முட்டை உற்பத்தியாளர் சங்கமும் தெரிவித்துள்ளது.

எனினும், முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான தீர்மானம் இந்த தருணத்தில் அவசியமான ஒன்று என பல பிரதேசங்களில் உள்ள நுகர்வோர் தெரிவிக்கின்றனர். (அ)

# சந்தேகநபர் சட்ட பரீட்சைக்கு தோற்ற நீதிமன்றம் அனுமதி!

கொழும்பு, ஜன. 04

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல கொலைச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரான சட்டக்கல்லூரி மாணவர் ஒருவரை சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பரீட்சைக்கு தோற்ற அழைத்துச் செல்லுமாறு மஹர சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அத்தனகல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அத்துக்கோரள மற்றும் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரான அஹங்கம விதாரணலாகே ஜயந்த குணவர்தன ஆகியோர் மே 9 ஆம் திகதி பிற்பகல் நிட்டம்புவ நகரில் இடம்பெற்ற பொது அமைதியின்மையின்போது கொல்லப்பட்டனர்.

இரட்டைக் கொலைகள் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரவிந்து குணவர்தன என்ற சந்தேக நபர் திறந்த பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு சட்டக்கல்லூரி மாணவர் எனவும் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, சந்தேக நபரை இறுதிப் பரீட்சைக்கு தோற்ற தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்தார். (அ)

# வடக்கு-கிழக்கில் கை சின்னத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டி!

கொழும்பு, ஜன. 04

எதிர்வரும் தேர்தலில் வடக்கு, கிழக்கில் கை சின்னத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிட எதிர்பார்த்துள்ளதாக அந்தக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இந்த தீர்மானத்துக்கு கட்சியின் மத்திய குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தயாசிறி ஜயசேகர மேலும் கூறினார்.

அத்தோடு ஏனைய மாவட்டங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்க பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார். (அ)

# இலங்கையின் புலனாய்வு அமைப்பில் குறைபாடுகள்

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 04

பிரபல பாதாள உலக குழு உறுப்பினர் கஞ்சிப்பானை இம்ரான் ராமேஸ்வரத்தில் பதுங்கியிருப்பதாக வெளியான தகவலை அடுத்து இலங்கையின் புலனாய்வு வலையமைப்பு தொடர்பில் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன நேற்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்தார்.

கஞ்சிப்பான இம்ரான் இலங்கையை விட்டுத் தப்பிச் சென்றது அவதானம் மிக்க நிலையாகும்.

முன்னதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையின் புலனாய்வு வலைப் பின்னல் குறித்த அவதான நிலை எழுப்பப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

எனினும், இலங்கையின் புலனாய்வு வலையமைப்பில் உள்ள குறைபாடுகள் கட்டம் கட்டமாக நிவர்த்தி செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

2022 டிசெம்பர் 25 ஆம் திகதியன்று ராமநாதபுரம் மாவட்டக் கடற்கரையோரத்தில் இறங்கியதாக கூறப்படும், கஞ்சிப்பான இம்ரான் மற்றும் அவரது நண்பர் ஆகியோரை தேடுமாறு தமிழக உளவுத் துறை மாநிலம் முழுவதும் உள்ள உயர் காவல்துறை அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொலைகள், குற்றங்கள், மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக இலங்கை அதிகாரிகளால் தேடப்படும் இம்ரான், 2019 இல் டுபாயில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

இந்நிலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த அவர், அண்மையில் இலங்கை நீதிமன்றத்தினால், 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பிணையில் வெளியில் வந்த பின்னர், இம்ரான் இந்தியாவுக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளதாக இந்திய மத்திய புலனாய்வு அமைப்புகள், தமிழக மாநில உளவுத் துறைக்கு அறிவித்திருந்தன.

அவர் மாறுவேடத்தில் நீதிமன்றத்தை விட்டு வெளியேறி தலை மன்னாருக்குச் சென்று அங்கிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கான ஏற்பாடுகளை அவரது நண்பர்கள் செய்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கஞ்சிப்பானை இம்ரான் இந்தியாவுக்குத் தப்பிச் செல்வது குறித்து இலங்கையில் இருந்து முறையான தகவல் எதுவும் இல்லை.

எனினும் இந்திய உளவுத் துறை அமைப்புகள் அவரது இயக்கம் குறித்து நம்பகமான தகவல்களைப் பெற்று எச்சரிக்கையை வெளியிட்டதாக இந்திய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. (அ)

# டுபாயில் உள்ள குற்றக்கும்பல் உறுப்பினர்கள் 10 பேரை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை

கொழும்பு, ஜன. 024

இலங்கையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த பத்து பேர் டுபாயில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களை அந்த நாட்டில் இருந்து நாடு கடத்துவதற்கான கோரிக்கையை டுபாய் சட்டமா அதிபருக்கு அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அறியமுடிகிறது.

டுபாய் அரசினால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலைவர் ஒருவர், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததன் காரணமாக, டுபாயில் தலைமறைவாகியுள்ள குற்றக்கும்பல் உறுப்பினர்களை இலங்கைக்கு நாடு கடத்துவது தடைப்பட்டது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை டுபாய் அரசாங்கத்திடம் அளித்த முறைப்பாட்டில் குறித்த குற்றக் கும்பல் உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தது. (அ)

# அச்சுவேலியில் நள்ளிரவில் ஒருவர் மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஜன. 04

அச்சுவேலி வடக்குப் பகுதியில் திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவரை மக்கள் மடக்கிப்பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அவரிடமிருந்து 2 இலட்சம் ரூபா பெறுமதியிலான நகையும் பணமும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அதிபர் மாற்றப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிட்டு பாடசாலைக்கு மாணவரை அனுப்பாத பெற்றோர்!



யாழ்ப்பாணம், ஜன. 04

வரணி கரம்பைக்குறிச்சு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

பெற்றோர்களினால் பாடசாலை நுழைவாயிலை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, பாடசாலைக்கு மாணவர்கள் எவரும் சமூகமளிக்காத நிலையில் ஆசிரியர்கள் மாத்திரம் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர்.

பாடசாலை அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்தனர். (அ)

# வகுப்பறைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடிவு

கொழும்பு, ஜன. 04

வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வகையில் புதிய சுற்றறிக்கை வெளியிட முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தரம் 1 முதல் 5 வரையான வகுப்பறைகளில் 40 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கப்படக்கூடாது என்றும், தரம் 6 முதல் 11 வரை அதிகபட்சமாக 45 மாணவர்களை அனுமதிக்கலாம் என்றும் உள்ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர் சேர்க்கை நடைமுறையில் திருத்தும் மேற்கொள்ள கல்வி அமைச்சர் முன்மொழிந்துள்ளார்.

இதன்படி, தரம் 2 முதல் 11 வரையிலான பாடசாலை மாணவர் சேர்க்கை தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது. (அ)

# தாலிபன்களின் கல்வி தடையை எதிர்த்து தனி ஆளாகப் போராடும் 18 வயது பெண்

- நூர் குல் ஷபாக்



'என்னுடைய கோரிக்கை நீதிக்கானது என்பதால் எனக்கு அச்சம் ஏதுமில்லை," என்கிறார் ஆப்கானிஸ்தானை சேர்ந்த 18 வயது இளம் பெண்.

தாலிபன் ஆட்சியாளர்கள் பெண்களின் உயர் கல்விக்கு எதிராக விதித்துள்ள தடையால், பட்டம் பெற வேண்டும் என்ற அந்த இளம் பெண்ணின் லட்சியம் வெற்றி பெறவில்லை. இந்த தடையால் தனக்கு எதிர்காலமே இல்லாமல் போய்விடும் என்று ஏற்பட்ட கோபத்தால் போராடும் அந்த இளம் பெண்ணின் பாதுகாப்பு கருதி அவரது பெயரை நாங்கள் மாற்றி குறிப்பிட்டிருக்கின்றோம். அசாதாரணமான முறையில் தனி ஒரு ஆளாக காபூல் பல்கலைக்கழகத்தின் முன்பு குர்ஆனிலிருந்து மேற்கோள் காட்டிய வார்த்தைகளோடு அவர் போராடினார்.

## தனி நபர் போராட்டம்

டிசம்பர் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று அடேலா, தனது பல்கலைக் கழகத்தின் நுழைவாயில் முன்பு 'படி" எனப் பொருள்படும் அரேபிய வார்த்தை எழுதப்பட்ட ஒரு பதாகையைப் பிடித்தபடி நின்றிருந்தார். முஹம்மது நபிக்கு கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட முதல் வார்த்தை இதுதான் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

'கல்விக்கான உரிமையை கடவுள் எங்களுக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் கடவுளுக்கு பயப்பட வேண்டிய தேவை இருக்கிறது. தாலிபன்களை கண்டு பயப்படத் தேவையில்லை. அவர்கள் எங்கள் உரிமைகளைப் பறிக்க விரும்புகின்றனர்," என அவர் கூறினார்.



'தாலிபன்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துபவர்களை அவர்கள் மோசமாக நடத்துவார்கள் என்பது தெரியும். அவர்கள் போராடுபவர்களை அடிப்பார்கள், தாக்குவார்கள், ஆயுதங்களை உபயோகிப்பார்கள், போராடுபவர்களைத் தற்காலிகமாக முடக்கும் வகையில் டேசர் எனும் ஆயுதத்தை உபயோகிப்பார்கள், சக்தி வாய்ந்த முறையில் தண்ணீரைப் பீச்சியடிக்கவும் செய்வார்கள். இருந்தும் அவர்கள் முன்னால் நின்றிருந்தேன்.

'முதலில் என்னை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. பின்னர், துப்பாக்கி ஏந்திய ஒரு நபர், இங்கிருந்து செல், என்று எச்சரித்தார். ஆரம்பத்தில் அடேலா அங்கிருந்து செல்ல மறுத்துவிட்டார்.

பல்கலைக்கழகத்தின் முன்பு விடாப்பிடியாக நின்றிருந்தார். அவர் பிடித்திருந்த பதாகையில் எழுதப்பட்ட வாசகம் அவரைச் சுற்றி நின்றிருந்த ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்களின் கவனத்தை ஈர்த்தது. பதாகையை கையில் ஏந்தியபடி நின்ற அவர், ஒரு தாலிபன் உடன் உரையாடினார்.

'நான் என்ன எழுதியிருக்கின்றேன்? என்று உங்களால் படிக்க முடிகிறதா?" என அவரிடம் கேட்டேன்." அதற்கு அந்தப் பாதுகாவலர் ஒன்றும் சொல்லவில்லை. அடேலா மேலும் அவரிடம், 'உங்களால் கடவுளுடைய வார்த்தையைப் படிக்க முடியவில்லையா?" என கேட்டார். 'அதன்பின்னர் அவர் கோபம் அடைந்து விட்டார், என்னை அச்சுறுத்தினார்." அந்த இளம் பெண் கையில் பிடித்திருந்த பதாகையைப் பிடுங்கிச் சென்றுவிட்டனர். தனி நபர் போராட்டத்தில் இருந்து 15 நிமிடங்களில் அவர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். அந்த இளம் பெண் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவருடைய மூத்த சகோதரி டாக்சி ஒன்றில் அமர்ந்தபடி அந்தப் போராட்டத்தை படம் பிடித்துக் கொண்டும், வீடியோ எடுத்துக் கொண்டும் இருந்தார்.

'இதனால் அந்த டாக்சி டிரைவர் தாலிபன்களை நினைத்து மிகவும் பயந்து போனார். தயவு செய்து படம் எடுக்க வேண்டாம் என என்னுடைய சகோதரியிடம் அவர் கெஞ்சினார். பிரச்னை வந்துவிடும் என அஞ்சினார். காரில் இருந்து வெளியேறுங்கள் என்றும் சொன்னார்," என்றார் அடேலா.

## பெண்கள் மீது அதிகரிக்கும் கட்டுப்பாடுகள்

அமெரிக்கா தலைமையிலான சர்வதேச படைகள் அவசரமாக வெளியேறியதைத் தொடர்ந்து, 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் தாலிபன் ஆட்சிக்கு வந்தது.

பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பதை முதலில் தாலிபன்கள் தடை செய்தனர். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பெண்கள் சில பாடங்களைப் படிப்பதற்குத் தடை விதித்தனர். அவர்கள் தங்கள் மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகங்களை மட்டுமே தேர்வு செய்ய முடியும் என்று அவர்களிடம் கூறினர்.

டிசம்பர் 20ஆம் திகதி பல்கலைக்கழகங்களுக்கு பெண்கள் செல்வதற்குத் தடை விதித்தனர். சர்வதேச அளவில் கண்டனங்கள் வலுத்தன. பின்னர் சில நாட்களுக்குப் பிறகு உள்ளூர் மற்றும் சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுவதைத் தடை செய்தனர்.

கல்வி தடைச்சட்டத்திற்கு எதிராகப் பெண்கள், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் அன்றிலிருந்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரானில் சமீபத்திய ஆர்ப்பாட்டங்களால் பிரபலப்படுத்தப்பட்ட 'பெண்கள், வாழ்க்கை, சுதந்திரம்" என்ற முழக்கத்தை சிலர் பயன்படுத்தியுள்ளனர். காபூல் பல்கலைக்கழகத்தில் தற்போது நான்கு கலைப் பிரிவுகள் பெண்களின் தலைமையில் உள்ளன.

பெண் பேராசிரியர்கள் இப்போது வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை என்று பல்கலைக்கழக அதிகாரிகள் கூறினார்.

## ஆண்களுக்கு அழைப்பு

அடேலா போன்ற பெண்களுக்கு தாலிபன்களை எதிர்த்துப் போராடுவது என்பது எளிதான காரியம் அல்ல. எனவே ஆண்கள் இதைப் போன்ற ஊக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். ஆனால், இதனால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படக்கூடும். 'என்னுடைய போராட்டத்தின் போது, ஓர் இளைஞர் எனக்கு ஆதரவாக வீடியோ எடுக்க விரும்பினார். ஆனால், அவரை தாலிபன் பாதுகாவலர்கள் கடுமையாகத் தாக்கினர்," என்றார் அவர்.

ஆண் பேராசிரியர் ஒருவர் தன்னுடைய எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக தொலைகாட்சி நேரலை நிகழ்வில் தன்னுடைய பட்டய கல்வி சான்றிதழை கிழித்துப் போட்டார்.

50க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகத் தங்களது வேலையை ராஜினாமா செய்திருப்பதாக தெரிய வந்தது.

வேலையை ராஜினாமா செய்த ஆசிரியர் ஒருவர் எம்மோடு பேசுகையில், தாலிபன்கள் தன்னைத் தாக்கியதால் மீண்டும் வேலையில் சேர்ந்து விட்டதாகக் கூறினார். ஆனால் ஆப்கானிஸ்தான் ஆண்கள் போராட்டத்தில் இணைவது முக்கியம் என்று அடேலா நம்புகிறார். 'இப்போதைக்கு வெகு சில ஆப்கானிஸ்தான் ஆண்கள் மட்டுமே எங்களுடன் துணை நிற்கின்றனர். ஈரானில் உள்ள ஆண்கள் தங்களுடைய சகோதரிகளுக்கு துணை நிற்கின்றனர். பெண்கள் உரிமைகளுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். கல்வி உரிமைக்கு ஆதரவாக நாமும் ஒன்றிணைந்து நின்றால் நாமும் 100 சதவிகிதம் வெற்றி பெற முடியும்," என்றார் அவர்.

## தொடரும் எதிர்ப்பு

அதேபோல, தாலிபன்களுக்கு வெளியில் இருந்து அழுத்தங்களும் வருகின்றன. கடந்த செவ்வாய்கிழமையன்று ஐநா பாதுகாப்பு சபை கவுன்சில், 'சிறுமிகள், பெண்களை கல்வி கற்பதில் இருந்து தடை செய்வது, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை சீர்குலைக்கிறது," எனக் கூறியுள்ளது.

ஆனால், தாலிபன் தலைவர்கள் இந்த விஷயத்தில் தெளிவாக இருக்கின்றனர். கார்டியனிடம் பேசிய ஆப்கானிஸ்தான் கல்வி அமைச்சர் நிடா முகமது நடிம், 'எங்கள் மீது அணு குண்டு வீசினாலும் கூட, இந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்படமாட்டாது," என்றார்.

## அடேலாவின் உறுதி

"என்னால் பறக்க முடியாவிட்டால் ஓடுவேன். ஓட முடியாவிட்டால் மெதுவான அடி எடுத்து வைப்பேன். அதுவும் முடியவில்லை என்றால் ஊர்ந்து செல்வேன். ஆனால் எனது போராட்டத்தை, எனது எதிர்ப்பை நிறுத்த மாட்டேன்," என உறுதியுடன் கூறினார். தன்னுடைய நண்பர்களின் ஆதரவையும் பாராட்டையும் அவர் பெற்று வருகிறார். 'நீங்கள் மிகவும் தைரியமானவர், நாங்கள் அனைவரும் உங்களுடன் இருக்கிறோம்" என்று அவரது நண்பர்கள் கூறுகின்றனர்.

முந்தைய தலைமுறைகளை விட இன்று ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்கள் இந்த போராட்டத்தில் வெற்றி பெறச் சிறந்தவர்கள் என்று அடேலா நம்புகிறார். 20 ஆண்டுகளுக்கு முந்தைய இருண்ட காலத்துக்கு நாங்கள் செல்ல விரும்பவில்லை, அந்தக் கால பெண்களை விட நாங்கள் தைரியமாக இருக்கிறோம். ஏனென்றால் நாங்கள் அதிகம் படித்தவர்கள், எங்கள் உரிமைகளை அறிந்தவர்கள்," என்று அடேலா உறுதிபடக் கூறினார். (பிபிசி)



# இனநெருக்கடிக்கு தீர்வு காணும் அரசாங்கத்தின் முயற்சிகளில் காணமுடியாமல் இருக்கும் ஒரு அம்சம்



கலாநிதி ஜெகான் பெரேரா

நீண்டகால இனநெருக்கடியை இலங்கையின் 75 வது சுதந்திர தினமளவில் தீர்த்துவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிக்காட்டியிருக்கும் உறுதிப்பாடு ஏனைய விவகாரங்களிலும் நேர்மறையான முன்னேற்றங்களை காண்பதற்கு நம்பிக்கை தரக்கூடிய தளமாக இருக்கமுடியும். இது நடைமுறை யதார்த்தமாக மாற்றப்பட வேண்டிய ஒரு நம்பிக்கையாகும். இனநெருக்கடியை அரசியல் ரீதியில் தீர்த்து வைப்பதற்கு கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளின் வரலாறு ஒரு நம்பிக்கையான தோற்றத்தை தரவில்லை.

இனநெருக்கடியை தீர்ப்பதற்கு முயற்சித்து தோல்விகண்ட இலங்கைத் தலைவர்களின் பட்டியல் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவில் தொடங்கி தற்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்க வரை நீடிக்கிறது. முன்னர் பிரதமராக தலைமைத்துவ பாத்திரத்தை வகித்த வேளை விக்கிரமசிங்க இந்த முயற்சியில் தோல்வி கண்டார்.

ஏனைய சமூகங்களின் கோரிக்கைகளை அரைவாசி அளவுக்கேனும் நிறைவேற்றுவதற்கு விட்டுக்கொடுப்பை செய்வதற்கான சாத்தியப்பாட்டுக்கு எதிராக தூண்டிவிடப்பட்ட அரசியல் எதிர்ப்பு அந்த தலைவர்களினால் சமாளிக்கமுடியாத அளவுக்கு பலமானவையாக இருந்தன.

ஆனால், கடந்த காலத்தைப் போலன்றி இத்தடவை இனநெருக்கடி தீர்க்கப்படக்கூடியதாக இருக்கும் என்று நம்புவதற்கு நான்கு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம் மிகவும் முக்கியமானது. பேச்சுவார்த்தை மேசைக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் கொண்டுவரக்கூடிய தலைமைத்துவ ஆற்றலே அதுவாகும்.

ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த அவர் தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்தக்கூடியவராக இருக்கிறார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அறிமுகப்படுத்தியவரான அவரின் மாமனார் அந்த அதிகாரங்களின் ஆணைப்பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் அதிகாரம் ஒன்று மாத்திரமே தன்னிடம் இல்லை என்று சொன்னார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு கடந்த வருட பிற்பகுதியில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 21வது திருத்தம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்த திருத்தத்தின் கீழ் அமைக்கப்படவேண்டிய நிறுவனங்களுக்கு தங்களில் யார்யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இணக்கப்பாடொன்றுக்கு வர இயலாமல் இருக்கும் அடுத்த மட்ட அரசியல்வாதிகள் மத்தியில் காணப்படும் ஐக்கியமின்மை தற்போதைய தருணத்தில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

பொதுமக்களின் அபிப்பிராயத்தை உருப்படியான முறையில் பிரதிபலிக்க முடியாத வகையில் பாராளுமன்றத்தின் நியாயப்பாடு சிதைக்கப்பட்டுவிட்டமை இரண்டாவது காரணமாகும். ஜனாதிபதியுடன் சேர்த்து முன்னைய அரசாங்கத்தை வீழ்த்திய போராட்ட இயக்கம் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாட்டையும் முறைமை மாற்றத்தையும் தேர்தல்களையும் கோரிநின்றது. இது பாராளுமன்றத்தில் உள்ள ஆளும் கட்சி உறுப்பினர்கள் விரைவாக பொதுத் தேர்தலை சந்திக்கவிரும்பாத அளவுக்கு அவர்களின் நீண்டகால திட்டங்களை சீர்குலைத்துவிட்டது. தற்போது அவர்கள் உள்ளூராட்சி தேர்தல்களைக் கூட விரும்பவில்லை என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெரும்பாலும் ஜனாதிபதியை எதிர்ப்பதற்கு விரும்பமாட்டார்கள். முன்கூட்டிய பொதுத் தேர்தல் ஒன்றில் பொதுமக்களின் ஆத்திரத்தில் இருந்து தப்புவதற்கு அவரது நல்லெண்ணத்திலேயே அவர்கள் தங்கியிருக்கிறார்கள்.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் பாராளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிடக்கூடிய அரசியலமைப்பு ரீதியான அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுவிடுவார் என்பது கவனிக்கத்தக்கது.

### மாறிவிட்ட மனப்பான்மை

பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பாலான எதிர்க்கட்சிகள் இனநெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கான முயற்சிகளுக்கு இணங்கக்கூடியவையாக இருப்பது மூன்றாவது காரணமாகும். எதிரணியில் உள்ள முக்கிய கட்சிகள் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் குறுகிய தேசியவாத நிலைப்பாடுகளை ஆதரித்துப் பேசாததற்கான விலையை செலுத்தின. அவை இனத்துவ விவகாரங்களை விடுத்து மற்றைய பிரச்சினைகளைப் பற்றியே பிரசாரம் செய்தன.

இது இனநெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை எதிரணியில் இருந்த அரசியல் கட்சிகள் பெரும்பாலும் எதிர்த்த பெருங்கேடான கடந்தகால அணுகுமுறையில் இருந்து விடுபடுவதற்கான ஆற்றலை அவை கொண்டிருக்கின்றன என்பதற்கான அறிகுறிகளை காட்டுகிறது. எதிரணி கட்சிகள் குறுகிய இனத்துவ தேசியவாத அரசியலில் ஈடுபடுவதும் சாத்தியமில்லை. ஏனென்றால் அவற்றுக்கு அது தேவையில்லை. இத்தடவை பொருளாதார வீழ்ச்சியும் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளுமே அவை பிரசாரப்படுத்தக்கூடிய பிரச்சினைகளாக இருக்கும்.

நாட்டில் அரசியல் அபிப்பிராயத்தின் இயல்பில் ஏற்பட்டிருக்கும் மாறுதலே நான்காவது காரணமாகும். கடந்த வருடம் இடம்பெற்ற பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு நாட்டுக்கு தேவைப்படுவது அடிப்படைச் சீர்திருத்தங்களே என்ற ஒரு உணர்வு பொது மக்கள் மத்தியில் காணப்படுகிறது. போராட்ட இயக்க காலப்பகுதியில் மக்கள் மத்தியில் பிரபல்யமாகியிருந்த 'முறைமை மாற்றம்" (System Change) என்ற சுலோகத்தின் மூலம் இந்த உணர்வு வெளிப்பட்டது.

பொறுப்புக்கூறலுக்கான கோரிக்கை அதாவது அரச நிதியை களவாடியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதுடன் அவர்களது சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படவேண்டும் என்பதும் போராட்ட இயக்க சுலோகங்களில் ஒன்று. இனத்துவ மற்றும் மத தேசியவாதத் திரைக்குப் பின்னால் மறைந்திருந்துகொண்டு கடந்த 74 வருட காலமாக முன்னெடுக்கப்பட்ட தவறான ஆட்சிமுறை மற்றும் முறைகேடுகள் மீதும் போராட்ட இயக்கம் கவனத்தைச் செலுத்தியது.

சகல இனத்துவ மற்றும் மத சமூகங்களினதும் பிரசைகளும் சமத்துவமான முறையில் நடத்தப்படவேண்டும் என்பதுடன் ஆதிகால சிந்தனைகளின் அடிப்படையில் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தியவர்கள் நிராகரிக்கப்படவேண்டும் என்ற சுலோகமும் முன்வைக்கப்பட்டது.

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொனறைக் காணவேண்டியது நாட்டு மக்கள் சகலரும் மோதலின்றி ஒன்றாக வாழ்வதற்கு வகை செய்வதற்காக மாத்திரமல்ல, நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் இந்த பிரச்சினையின் விளைவாக ஏற்பட்ட அரசியல் உறுதிப்பாடின்மையையும் வன்முறையையும் இல்லாமல் செய்வதற்கும் முக்கியமானதாகும். நாட்டில் பொருளாதார முதலீடுகளுக்கு பெரிய முட்டுக்கட்டையாக உறுதிப்பாடின்மையும் வன்முறையும் இருந்துவந்தன.

> போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினையைப் பொறுத்தவரை, அவை கடந்த காலத்தில் இடம்பெற்றவை, தற்போது அவ்வாறான பிரச்சினை கிடையாது என்று கூறப்படமுடியும். ஆனால் பொருளாதாரக் குற்றங்களைப் பொறுத்தவரை கடந்தகால செயல்கள் இப்போது மீண்டும் பெருமளவில் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. இது ஏற்றுக்கொள் ளப்படமுடியாததாகும்.



1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் சுதந்திர சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை மாற்றமும் பெருமளவு சர்வதேச உதவிகளைக் கொண்டுவந்தன. மகாவலி திசைதிருப்பல் திட்டம் இதில் முக்கியமானது. பிரிட்டிஷ் மக்களினால் இலங்கைக்கு முற்றிலும் கொடையாக வழங்கப்பட்டதே விக்டோரியா நீர்த்தேக்கமாகும்.

ஆனால், 1983 ஜூலையில் இடம்பெற்ற இன வன்செயல்கள் சர்வதேச முதலீடுகளுடனான பொருளாதார முன்னேற்றத்துக்கான வாய்ப்பை நிர்மூலஞ்செய்தன.

### அறகலயவின் கோரிக்கை

இப்போது தேசிய பொருளாதாரத்தின் மீது முதலீட்டாளர்களின் நம்பிக்கைய கட்டியெழுப்புவதற்கு அவசியமான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுக்காக இலங்கை இன்னமும் காத்துக்கொண்டு நிற்கிறது. ஆனால் இந்த ஆதரவு, இலங்கை திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் கொடுப்பனவுகளில் ஒரு விகிதாசார அளவில் குறைப்பைச் செய்வதற்கு சீனா காட்டுகின்ற தயக்கத்தினால் தாமதமாகிறது. வங்குரோத்து அடைந்துவிட்ட நாடு ஒன்று பெரிய பொருளாதார வல்லமை கொண்ட நாட்டிடம் விடுக்கின்ற நியாயபூர்வமான வேண்டுகோளாக இது இருக்கின்ற நிலையில் சீனா ஒத்துழைக்காமல் இருப்பதற்கு வேறு புவிசார் அரசியல் மற்றும் மூலோபாய காரணங்களும் இருக்கக்கூடும். இலங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கினால் தன்னிடம் கடன்பட்ட (இலங்கையை விடவும் வறுமையான ) பல நாடுகள் விடுக்கக்கூடிய வேண்டுகோளுக்கும் இணங்கவேண்டிவரும் என்று சீனா நினைப்பதாக பொதுவாக நம்பப்படுகிறது.

இந்த பின்னணியில் இலங்கை வேறு தரப்புகளிடம் இருந்து சர்வதேச உதவியை இலங்கை நாடி நிற்கிறது. நீண்டகால இனநெருக்கடிக்கு காணப்படக்கூடிய இணக்கத்தீர்வு இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் நேர்மறையான ஒரு படிமம் ஏற்படுவதற்கு வழி வகுக்கலாம். சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அனுசரணை வழங்க வெவ்வேறு கட்டங்களில் முன்வந்த இந்தியா, ஜப்பான், நோர்வே, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் பாரதூரமான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு ஆதரவை வழங்குவதற்கு ஆர்வப்படக்கூடும். அந்த நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழ்ச்சமூகம் இலங்கையின் சார்பில் - குறிப்பாக பெருமளவுக்கு கவனிக்கப்படாமல் இருக்கும் வடக்கு, கிழக்கு பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு - ஆதரவுக் குரல் வலிமையான ஒரு சக்தியாக விளங்கமுடியும்.

ஆனால், பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் என்பது இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் காணமுடியாமல் இருக்கும் அம்சமாகும். பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளிலும் இதே இடைவெளி இருக்கிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் இறுதியாக நிறைவேற்றிய தீர்மானத்தில் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும், பொருளாதாரக் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் பிரச்சினை புறக்கணிக்கப்படுகின்றது.

போர்க்குற்றங்கள் தொடர்பான பிரச்சினையைப் பொறுத்தவரை, அவை கடந்த காலத்தில் இடம்பெற்றவை, தற்போது அவ்வாறான பிரச்சினை கிடையாது என்று கூறப்படமுடியும். ஆனால் பொருளாதாரக் குற்றங்களைப் பொறுத்தவரை கடந்தகால செயல்கள் இப்போது மீண்டும் பெருமளவில் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது. இது ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாகும். தேசிய நல்லிணக்கமும் அபிவிருத்தியும் நடைமுறை யதார்த்தங்களாக வேண்டுமென்றால் ஜனாதிபதியும் அரசாங்கமும் ஊழல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களின் நலன்களில் மானசீகமான அக்கறையைக் காண்பிக்கவேண்டும்.

# ‘பெண்களுக்கு பாதுகாப்பில்லை’ என பதிவிட்டு பா.ஜ.கவில் இருந்து விலகிய காயத்ரி ராகுராம்

தமிழ்நாடு பா.ஜ.கவின் வெளிநாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சிப் பிரிவின் தலைவராக முன்பு பதவி வகித்த காயத்ரி ரகுராம், தமிழ்நாடு பா.ஜ.க வில் இருந்து விலகுவதாக தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். மேலும் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலையின் தலைமைக்கு கீழ் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற குற்றச்சாட்டையையும் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் முன் வைத்துள்ளார்.



### காயத்ரி ரகுராமின் பதிவு

‘பெண்களுக்கு மரியாதை, சம உரிமை இல்லாத தமிழ்நாடு பாஜகவில் இருந்து வெளியேறும் முடிவை கனத்தை இதயத்துடன் எடுக்கிறேன்,’ என தனது டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார் நடிகையும், பாஜக நிர்வாகியுமான காயத்ரி ரகுராம்.

மேலும் தனது ருவிட்டர் பதிவில், தமிழ்நாட்டில் பா.ஜ.கவின் தலைவராக உள்ள அண்ணாமலையின் தலைமையின் கீழ் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்றும், என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணைக்கு பா.ஜ.கவில் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்றும் பதிவிட்டுள்ளார், காயத்ரி ரகுராம்.

அவரது ருவிட்டர் பதிவில், ‘பா.ஜ.கவின் உண்மைத் தொண்டர்கள் குறித்து யாரும் கவலை கொள்வதில்லை. மேலும் உண்மையான பா.ஜ.க தொண்டர்களை கட்சியில் இருந்து விரட்டுவது மட்டுமே அண்ணாமலையின் ஒரே குறிக்கோளாக உள்ளது. நான் எடுத்த இந்த முடிவுக்கு அண்ணாமலை தான் காரணம்,’ என குறிப்பிட்டுள்ளார்.

அண்ணாமலையை, ‘அதர்ம தலைவர் என்றும் மலிவான பொய்களை கூறும் தந்திரக்காரர்,’ என்று தனது ருவிட்டர் பதிவில் காயத்ரி குறிப்பிட்டுள்ளார். அண்ணாமலையிடம் இருந்து சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது. பா.ஜ.கவில் இருக்கும் பெண்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், யாரும் உங்களை வந்து காப்பாற்றுவார்கள் என நம்பி இருக்க வேண்டாம் எனவும் காயத்ரி ரகுராம் பதிவிட்டு இருக்கிறார்.

தேவை ஏற்பட்டால் தன்னிடம் இருக்கும் வீடியோக்களையும், ஓடியோக்களையும் காவல்துறையிடம் ஒப்படைத்து முறைப்பாடு செய்ய தயாராக உள்ளதாகவும் காயத்ரி ரகுராம் தெரிவித்துள்ளார்.

காயத்ரி ரகுராமின் இந்த பதிவு குறித்து அண்ணாமலை இதுவரை எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.

### ராஜினாமாவின் பின்னணி?

பா.ஜ.கவின் பிற்படுத்தப்பட்டோர் அணியின் செயலாளராக முன்பு இருந்த திருச்சி சூர்யா சிவா, அந்த கட்சியின் சிறுபான்மைப் பிரிவின் செயலாளராக இருக்கும் டெய்சி என்பவரிடம் தொலைபேசியில் பேசிய உரையாடல் சில வாரங்களுக்கு முன்பு சமூக வலைத்தளங்களில் அதிகமாக பகிரப்பட்டது.

இந்த உரையாடலில் திருச்சி சிவா பேசிய கருத்துக்கள் தொடர்பாக, தனது கண்டனத்தை காயத்ரி ரகுராம் தெரிவித்து இருந்தார். இதனையடுத்து காயத்ரி ராகுராம், கட்சிக்கு களங்கம் தெரிவிக்கும் வகையில் செயல்பட்டதாக கூறி அவரை 6 மாத காலத்திற்கு கட்சியில் இருந்து நீக்கி பா.ஜ.க தலைவர் அண்ணாமலை உத்தரவிட்டு இருந்தார். ‘u;e Always wanted me out’ என அப்போது ருவிட்டரில் காயத்ரி ரகுராம் குறிப்பிட்டு பதிவிட்டு இருந்தார். ஆனால் யாரை குறிப்பிட்டு பதிவிட்டு இருந்தார் என காயத்ரி ரகுராம் அப்போது கூற மறுத்துவிட்டார்.



அண்ணாமலையை, ‘அதர்ம தலைவர் என்றும் மலிவான பொய்களை கூறும் தந்திரக்காரர்,’ என்று தனது ருவிட்டர் பதிவில் காயத்ரி குறிப்பிட்டுள்ளார். அண்ணாமலை யிடம் இருந்து சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது. பா.ஜ.கவில் இருக்கும் பெண்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், யாரும் உங்களை வந்து காப்பாற்றுவார்கள் என நம்பி இருக்க வேண்டாம் எனவும் காயத்ரி ரகுராம் பதிவிட்டு இருக்கிறார்.

கல்வி tv CHANNEL-1

**04.01.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**04.01.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரச ஊழியர்களுக்கான முற்பணம் 10,000 ரூபாவாக அதிகரிக்கவேண்டும்

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கோரிக்கை

நிந்தவூர், ஜன. 04

அரசாங்க ஊழியர்களுக்கான புது வருட விசேட முற்பணக் கொடுப்பனவை, தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு 10,000 ரூபாவாக அதிகரிக்குமாறு இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி நிதியமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு என்பவற்றின் செயலாளர்களுக்கு மேற்படி சங்கம் அவசர மகஜர்களை அனுப்பி வைத்திருப்பதாக அதன் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

அரச ஊழியர்களுக்கு புது வருட விசேட முற்பணம் வழங்கப்படுவதன் பிரதான நோக்கம் புது வருடத்தில் அரச ஊழியர்களது பிள்ளைகளுக்குரிய பாடசாலை தேவைகளை நிறைவேற்றி கொள்வதற்காகும்.

ஆனால், அரசாங்கம் அறிவித்துள்ள 4000 ரூபாவைக் கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதனையும் செய்து கொள்ள முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் அப்பியாசக் கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்துள்ள சூழ்நிலையில் இத்தொகையைக் கொண்டு ஒரு பிள்ளையின் தேவையைக் கூட முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியாத இக்கட்டான சூழ்நிலையில் அரச ஊழியர்கள் உள்ளனர் .

எனவே, இத்தொகையை ஆகக்குறைந்தது 10000 ரூபா வரை அதிகரிப்பதன் மூலமே தமது பிள்ளைகளின் தேவைகளை அரச சேவை ஊழியர்கள் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதை குறித்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்-என்றார்.

(அ-06)

# கிழக்கு மாகாண சபை செயலகத்தின் செயலாளராக எம்.கோபாலரெத்தினம்



திருமலை, ஜன. 04

கிழக்கு மாகாண சபை செயலகத்தின் செயலாளராக மட்டக்களப்பைச் சேர்ந்த எம்.கோபாலரெத்தினம் கிழக்கு மாகாண அளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாயளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஆகிய உயரதிகாரிகளுக்கான 2023 ஆம் ஆண்டின் புதுவருட சந்திப்பும், இவ்வாண்டின் வேலைத்திட்ட செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடலும் நேற்று முன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் அளுநர் செயலகத்தில் இடம்பெற்றபோதே அவருக்கான இந்த நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண சபை செயலகத்தின் செயலாளராக கடமையாற்றிய வந்த எம்.வை.சலீம் கடந்த 31.12.2022 ஆம் திகதி ஓய்வு பெற்று சென்றதையடுத்து ஏற்பட்ட இந்த வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவியையும் வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பட்டிருப்பு கல்வி பணிப்பாளராக மகேந்திரகுமார் பதவியேற்றார்

அம்பாறை, ஜன. 04

பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையின் புதிய வலய கல்வி பணிப்பாளராக செபமாலை மகேந்திரகுமார் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

முன்னர் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராகவிருந்த திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் இதே பட்டிருப்பு வலய கல்வி பணிப்பாளராகவும் கடமையாற்றி நேற்று முன்தினம் ஓய்வு பெற்றதனால் வெற்றிடமேற்பட்டது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 ஐச்சேர்ந்த இவர் இதுவரை அதே வலயத்திலே பிரதி கல்வி பணிப்பாளராக கடமை ஆற்றி வந்தார்.

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அதிபராகவும் , கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், திருக்கோவில் , மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய வலயங்களில் பிரதிக் கல்வி பணிப்பாளராகவும் கடந்த 15 வருடங்களாக பணியாற்றி வந்தவர். நேற்று முதல் வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற செப மாலை மகேந்திரகுமார் பாண்டிருப்பைச் சேர்ந்தவராவார். (அ)

# சமாதானப் புறாவை பறக்க விடப்பட்டு வைத்தியசாலையில் பதவிப்பிரமாணம்

அம்பாறை, ஜன. 04

சமாதானப்புறா பறக்க விடப்பட்டு அரச சத்தியப்பிரமாணம் எடுத்த நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது.

புத்தாண்டில் அரச அலுவலக கடமைகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கும் முதல் நாள் நிகழ்வில், முன்னதாக தேசிய கொடியேற்றத்துடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதில் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் மற்றும் பிரதி வைத்திய அத்தியட்சகர்



டாக்டர் ஜெ.மதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மற்றும் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்து முதல் நாள் சத்தியபிரமாண நிகழ்வில் பங்குபற்றினர்.

இந் நிகழ்வில் மரம் ஒன்றும் நடப்பட்டது. மேலும் சமாதானத்திற்காக புறா ஒன்றும் பறக்கவிடப்பட்டது. (அ)

# மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய காரைதீவில் ஒரு குடும்பத்தின் முன்மாதிரி!

அம்பாறை, ஜன. 04

காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை பூர்த்திசெய்யும் வகையில் காரைதீவில் உள்ள ஒரு குடும்பம் ஒரு தொகுதி மருந்துப் பொருட்களை வழங்கியுள்ளது.

காரைதீவு மார்க்கண்டு(முதலாளி) சமூகஅறக்கட்டளை மூலம் ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் புது வருட தினமான கடந்த ஞாயிற்றுக் கிழமை குடும்ப உறுப்பினர்களால் அன்பளிப்பு செய்யப்பட்டன.



இவர்கள் ஒரு லட்ச ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சமுக அறக்கட்டளை பிரதிநிதியான திருமதி மார்க்கண்டு மற்றும் மகன் வித்தியானந்தன் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலைக்கு சென்று மருந்துகளை வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரனிடம் வழங்கினர்.

மருந்து தட்டுப்பாட்டை நீக்க உதவும்படி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரன் பகிரங்கமாக கோரியிருந்தமை தெரிந்ததே. (அ)

# வினைத்திறனுடனான சேவைகளை அரச ஊழியர் முன்னெடுக்கவேண்டும்

## நிந்தவூர் பிரதேச செயலாளர் வலியுறுத்து

நிந்தவூர், ஜன. 04

“குறைவான வளங்களைக் கொண்ட நிறைவான மக்கள் சேவைகளை வினைத்திறனுடன் அரச உத்தியோகத்தர்கள் முன்னெடுக்கவேண்டும். இதனிமித்தமே சேவைகள் பட்டயம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது”

-இவ்வாறு நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லதீப் கூறினார்.

நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற புதிய வருட கடமைப் பொறுப்பேற்பு அரச சேவை உறுதியுரை நிகழ்வுக்குத்தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலக சகல, உத்தியோகத்ர்கள், ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன்,

நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்கென இரு நிமிட மௌனம் அனுஷ் டிக்கப்பட்ட பின்னர் சகலரும் அரச சேவை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நிகழ்வில் உதவி பிதேச செயலளார் ரி.ஜெஸான், நிர்வாக உத்தியோகர்தர் எம்.பி.சரீன், கணக்காளர் சாஜிதா பர்வீன், நிதி உதவியாளர் எம்.வை. எம்.நஜீப், திட்டமிடல் பிரதி பணிப்பாளர் ஏ.எம். சுல்பிகார் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.அன்வர், சிரேஷ்ட கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.பைரூஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லதீப் தொடர்ந்து உரையாற்றுகையில்-

கோவிட் பரவலால் நாட்டில் ஏற்பட்ட பெரும்பாதிப்பு மற்றும், பொருளாதாரமந்த நிலை, மற்றும் பல்வேறு பிரச்சினைகளை நாடு எதிர் நோக்கியதால் இன்று மக்களும் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனினும் இத்தகைய நெருக்கடிகள், பிரச்சினைகளிலிருந்து மக்களையும், நாட்டையும் மீட்டெடுப்பதற்கு இன்று அரசு பகீரத முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

இதனடிப்படையிலேயே எதிர்வரும் 25 வருடங்களை இலக்காக் கொண்டு காத்திரமான கொள்கைத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கொவிட்டுக்குப் பின்னரான சிந்தனை, பொருளாதாரமீட்சி என்பவற்றுக்காக நாட்டு மக்கள் மட்டுமன்றி, அரச உத்தியோகத்தர்களான நாமும் அர்ப்பணிப்பான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

குறிப்பாக இன்று வறுமை அதிகரித்துள்ள நிலையில், வறுமை ஒழிப்புக்கான நடவடிக்கைகளையும் அனைவரும் முன்னெடுக்க முன்வரவேண்டும்.

இன்று கொழும்பில் குவிந்திருந்த அரச சேவைகளை, மாவட்ட மட்டம், பிரதேச மட்டமென பரவலாக்கம் செய்யப்பட்டு, கிராமங்களில் மறுமலர்ச்சிமையங்களும் உருவாகி வருகின்றன.

எனவே வீண் விரயங்கள், ஊழல்கள் களையப்பட்ட நிலையில் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் வினைத்திறனான சேவை மேம்பட வேண்டும்-என்றார். (அ-06)

# உளவு வேலைகளுக்காக பாகிஸ்தான் நடிகைகள்!

## முன்னாள் இராணுவ அதிகாரி திடுக் தகவல்

இஸ்லாமாபாத், ஜன.04

**உளவு வேலைகளுக்கு பாகிஸ்தானிய நடிகைகளை பயன்படுத்தியுள்ளனர் என அந்நாட்டின் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரி திடுக்கிடும் தகவலை தெரிவித்து உள்ளார்.**

பாகிஸ்தான் நாட்டின் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் அடில் ராஜா. முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தீவிர ஆதரவாளரான அவர், கடந்த ஆண்டு ஏப்ரலில் பாகிஸ்தானில் இருந்து திடீரென காணாமல் போனார் என தகவல் வெளியானது.

அதன்பின் இங்கிலாந்தில் உள்ள அவரது குடும்பத்தினருடன் இணைந்துவிட்டார் என கூறப்பட்டது.

இவர், ராணுவ வீரர் பேசுகிறார் என்ற பெயரிலான யூ-ரியூப் சனல் ஒன்றை நடத்தி வருகிறார். 2.9 லட்சம் பேர் அதனை பின்தொடருகின்றனர்.

அதில் சமீபத்தில் அவர், நாட்டின் சக்தி வாய்ந்த அமைப்புகள் பாகிஸ்தானிய நடிகைகளை உளவு வேலைகளுக்கு பயன்படுத்தியுள்ளது என்ற திடுக்கிடும் தகவலை வெளியிட்டார்.

அவர்கள் பெயர் எதனையும் குறிப்பிடாதபோதும், அவர்களது பெயரின் முதல் எழுத்துகளை பயன்படுத்தி உள்ளார்.



இந்த வீடியோ வைரலானதும், பாகிஸ்தான் உளவு அமைப்பு தயாரித்து வெளியிட்ட நாடகங்களில் பணியாற்றியவர்களை குறிப்பிட்டு, அவர்களே அடில் கூறியுள்ள நடிகைகள் என மக்கள் கூற தொடங்கினர்.

அதில், நடிகை சாஜல் ஆலை என்பவரும் ஒருவர்.

அதற்கு சாஜல், கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார். நமது நாட் டின் தரம் குறைந்து போவது என்பது வருத்தத்திற்கு உரி யது மற்றும் அருவ ருக்கத்தக்கது. ஒருவரின் தனி பண்பு நலனை படுகொலை செய்வது என்பது மனிததன்மையின் மிக மோசம் வாய்ந்த வடிவம் மற்றும் பாவத்திற்குரியது என தெரிவித்து உள்ளார்.

கடந்த காலங்களில், உயர் பதவியில் இருந்த இந்தியர்களை காதல் என்ற பெயரில் பயன்படுத்தி அவர்களிடம் இருந்து ராணுவ உளவு தகவல்களை, பாகிஸ்தானை சேர்ந்த சில பெண்கள் பெற்ற செய்திகள் வெளிவந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது. (அ)

# பிலிப்பைன்ஸ் வெள்ளம் உயிரிழப்பு 51ஆக உயர்வு



மணிலா, ஜன. 04

பேரழிவு தரும் வெள்ளத்தை அடுத்து பிலிப்பைன்ஸில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 51ஆக உயர்ந்தது மற்றும் 19 பேர் காணவில்லை.

தெற்கு மிசாமிஸ் ஆக்சிடென்டல் மாகாணத்தில் வசிப்பவர்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் தற்போது அவசரகால முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடலோர கிராமமான கபோல்-அனோனானில், தென்னை மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு, லேசான பொருட்களால் செய்யப்பட்ட குடிசைகள் ஏறக்குறைய தரைமட்டமாக்கப்பட்டன.

தேசிய பேரிடர் இடர் குறைப்பு மற்றும் மேலாண்மை சபையின் படி, வடக்கு மின்டானாவ் பகுதி பேரழிவின் முக்கியப் புள்ளியாக உள்ளது. அங்கு 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் நீரில் மூழ்கி மற்றும் நிலச்சரிவினால் இறந்தவர்கள் ஆவர் காணாமல் போனவர்களில் படகுகள் கவிழ்ந்த மீனவர்களும் அடங்குவர்.

பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் குறைந்துள்ளது, ஆனால் 8,600க்கும் மேற்பட்ட மக்கள் இன்னும் தங்குமிடங்களில் உள்ளனர். (அ)

# இந்தியா மீது தாக்குதல் நடத்த காத்துக்கொண்டிருக்கும் சீனா!

## ராகுல் காந்தி வெளியிட்ட பரபரப்பு தகவல்

புதுடில்லி, ஜன. 04

உக்ரைனின் உள்நாட்டு பிரச்னைகளை பயன்படுத்தி ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவது போல், இந்தியா மீது தாக்குதல் நடத்த சீனா காத்துக்கொண்டிருப்பதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அச்சம் தெரிவித்துள்ளார்.


புதுடில்லியில் நடிகரும், மக்கள் நீதி மையத்தின் தலைவருமான கமல்ஹாசனுடன் மேற்கொண்ட உரையாடலின் போது இந்த கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

ஒற்றுமை பயணத்தில் பங்கேற்றமைக்காக நடிகர் கமல்ஹாசனுக்கு ராகுல் காந்தி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

லடாக் எல்லையில் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சீனா ஆக்கிரமித்து கொண்டுள்ளது என்று கூறிய ராகுல், இதை பிரதமர் மோடி மறுத்து வருவதாக குற்றம் சாட்டினார். பிரதமர் மோடியின் மறுப்பால் எல்லை தொடர்பான பேச்சுவார்த்தையில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் முறைப்பாடு தெரிவித்தார்.

நேட்டோ படையுடன் சேர துடிக்கும் உக்ரைனை ரஷ்யா தாக்கி வருவது போல், ஒரு உள்நாட்டு பிரச்னையை பயன்படுத்தி சீனாவும் தாக்க காத்துக்கொண்டிருப்பதாக ராகுல் காந்தி அச்சம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு மக்களை வெகுவாக புகழ்ந்த ராகுல்காந்தி, மற்ற மாநில மக்களை விட தமிழர்கள் செலுத்தும் அன்பு வித்தியாசமானது என்றார்.



தமிழர்கள் ஏன் இத்தனை உணர்வுபூர்வமாகவும், ஆர்வமாகவும் அன்பு செலுத்துகின்றனர் என்று தான் ஒவ்வொரு முறையும் வியந்ததாக ராகுல் காந்தி சிலிர்ப்புடன் தெரிவித்தார். தமிழர்களின் மொழி பற்று குறித்தும் ராகுல் காந்தி வியந்து குறிப்பிட்டார். (அ)

# உக்ரைன் தாக்குதலில் மகிவ்கா நகரில் ரஷ்யப் படையினர் 400 பேர் உயிரிழப்பு!

கீவ், ஜன. 04

புத்தாண்டு நாளில் தமது இராணுவத்தினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் ரஷ்ய இராணுவத்தினர் 63 பேர் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் அறிவித்துள்ளது.

உக்ரைனின் டோனெட்க்ஸ் மாகாணத்தில் உள்ள மகிவ்கா நகர் உள்ள ரஷ்ய இராணுவத்தினரின் தற்காலிக இராணுவத்தளத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.




இதேவேளை,

உக்ரைன் 06 ஏவுகணைகளை தமது நிலைகள் மீது ஏவியதாகவும் அவற்றில் இரண்டினை தாம் சுட்டுவீழ்த்தியதாகவும் ரஷ்ய இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுவரையில், மகிவ்கா நகரில் உள்ள ரஷ்யப் படையினர் மீது தமது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இதுவரையில் ரஷ்ய இராணுவத்தினர் 400 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 300 பேர் காயமடைந்துள்ளதாகவும் உக்ரைன் அறிவித்துள்ளது. (அ)

# ஆஸி. ஹெலிகொப்டர்கள் விபத்து: பிரிட்டன் தம்பதியினர் உயிரிழப்பு!

கான்பரா, ஜன. 04

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற ஹெலிகொப்டர்கள் விபத்தில் பிரிட்டன் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

குயின்ஸ்லாந்தின் கோல்ட் கோஸ்ட்டில் உள்ள சீ வேர்ல்ட் அருகே நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் பிரிட்டன் தம்பதியினர் மற்றும் இரண்டு அவுஸ்திரேலியர்கள் உயிரிழந்துள்ளனர். இரண்டு சிறுவர்கள் உட்பட மூன்று பேர் பலத்த காயமடைந்தனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. ஒரு ஹெலிகொப்டர் மணல் பரப்பில் இருந்து புறப்பட்டு, தரையிறங்கிய மற்றொரு ஹெலியின் மீது மோதியதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இறந்தவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்கள் அனைவரும் ஏறும் ஹெலிகொப்டரில் இருந்தனர். அதன் முக்கிய ரோட்டர் பிளேட் மற்ற விமானத்தின் கொக்பிட்டைத் தாக்கிய சில நொடிகளில் விபத்துக்குள்ளானது என்று அவுஸ்திரேலிய போக்குவரத்து பாதுகாப்பு பணியகம் தெரிவித்துள்ளது.



இரண்டாவது ஹெலிகொப்டர் மணல் கரையில் நிமிர்ந்து தரையிறங்கியது. ஹெலியில் இருந்த 6 பேரில் ஐந்து பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. (அ)




# 2023ஆம் ஆண்டில் முதல் சதத்தை பதிவு செய்த வீரர்

நியூஸிலாந் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐ.சி.சி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் 2ஆவது போட்டி கராச்சியில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த போட்டியில் துடுப்பாட்டத்தில் டெவன் கொன்வே சதத்தைப் பூர்த்தி செய்துள்ளார்.

இதன் மூலம் புத்தாண்டில் முதலாவது டெஸ்ட் சதத்தைப் பெற்ற வீரர் என்ற பெருமையை டெவன் கொன்வே பெற்றுக்கொண்டார்.

இந்த போட்டியில் நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

டொம் லெதம், டெவன் கொன்வே ஆகிய இருவரும் 134 ஓட்டங்களைப் பகிர்ந்து நியூஸிலாந்துக்கு சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

கராச்சியில் கடந்த வருட இறுதியில் முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

அந்த போட்டியில் சதம் குவித்த டொம் லெதம் இப்போட்டியிலும் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 71 ஓட்டங்களைப் பெற்றார்.

டொம் லெதம் ஆட்டமிழந்த பின்னர் டெவன் கொன்வேயுடன் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் கேன் வில்லியம்சன் 2ஆவது விக்கெட்டில் சரியாக 100 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

ஆனால், அதன் பின்னர் 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 5 விக்கெட்கள் சரிந்தன.

திறமையாகத் துடுப்பெடுத்தாடிய டெவன் கொன்வே 16 பவுண்டறிகள், ஒரு சிக்ஸ் அடங்கலாக 122 ஓட்டங்களைப் பெற்றார்.

# முதல் ஓவரிலேயே ஹட்ரிக் எடுத்து உனாட்கட் சாதனை!




ரஞ்சி கிண்ண வரலாற்றில் முதல் ஓவரில் ஹாட்ரிட் க் எடுத்த முதல் பந்துவீச்சாளர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் ஜெயதேவ் உனாட்கட்.

ராஜ்கோட்டில் நடைபெறும் ரஞ்சி கோப்பை ஆட்டத்தில் டில்லி - சௌராஷ்டிரம் அணிகள் மோதுகின்றன. நாணய சுழற்சி வென்ற டில்லி அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதல் ஓவரிலேயே மூன்று விக்கெட்டுகளை எடுத்துத் ஆச்சரியப்படுத்தினார் சௌராஷ்டிர அணி கேப்டனான உனாட்கட். மூன்றாவது பந்தில் துருவ் ஷோரேவை போல்ட் செய்தார்.

அடுத்த இரு பந்துகளில் வைபவ், யாஷ் துல் ஆகியோரின் விக்கெட்டுட் களையும் வீழ்த்தி ஹாட்ரிக் எடுத்தார். இதன்மூலம் ரஞ்சி கோப்பை வரலாற்றில் முதல் ஓவரில் ஹாட்ரிக் எடுத்த முதல் பந்துவீச்சாளர் என்கிற சாதனையைப் படைத்தார்.

தனது 2ஆவது ஓவரில் ஆயுஷ் பதோனி, ஜான்டி சித்துத் ஆகியோரின் விக்கெட்டுகளையும் எடுத்துத் 5 விக்கெட்டுகளை 2 ஓவர்களுக்குள் எடுத்துத் அசத்தினார். 31 வயது உனாட்கட், 12 வருடங்களுக்குப் பிறகு இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பிடித்தார்.

# குடும்பத்துடன் சவூதிக்கு சென்றார் ரொனால்டோ

போர்த்துகல் உதைபந்தாட்ட நட்சத்திரமான கிறிஸ்ரியானோ ரொனால்டோ சவூதி அரேபியாவின் தலைநகர் றியாத்தைச் சென்றடைந்துள்ளார்.

றியாத் நகரிலுள்ள அல் நாசர் கழகத்தில் விளையாடுவதற்கான ஒப்பந்தத்தில் ரொனால்டோ கையெழுத்திட்டுள்ளார்.

இதற்காக அவருக்கு வருடாந்தம் 200 மில்லியன் யூரோவுக்கு (சுமார் 7800 கோடி இலங்கை ரூபா, 1,768 கோடி இந்திய ரூபா) அதிகமான ஊதியம் வழங்கப்படும் என நம்பப்படுகின்றது.



நேற்று முன் தினம் இரவு ரொனால்டோ றியாத் நகரை சென்றடைந்தார். அவரை வரவேற்பதற்கான பதாகைகள் றியாத் நகரில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ரொனால்டோவுடன் அவரின் மனைவி ஜோர்ஜியா ரொட்றிக்கஸ் மற்றும் குடும்பத்தினரும் சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளனர்.

உதவியாளர்களைக் கொண்ட பெரிய குழுவுடன் அவர் சென்றுள்ளார். தனியார் பாதுகாப்பு நிறுவன உத்தியோகத்தர்களையும் அவர் அழைத்து சென்றுள்ளார் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரொனால்டோவின் வருகையை ஒட்டி, றியாத் நகரின் விமான நிலையத்தைச் சூழ கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பல சோதனைச்சாவடிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

# வீரர்களுக்கு கபில் 'அட்வைஸ்'




"வீரர்கள் கூடுதல் கவனத்துடனம் செயல்பட வேண்டும்," என இந்திய அணியின் முன்னாள் வீரர் கபில் தேவ் தெரிவித்தார்.

இந்திய அணி இளம் விக்கெட்கீப்பர் ரிஷாப் பன்ட், 25. சமீபத்தில், உத்தரகாண்ட்டில் இருந்து டில்லி நோக்கி கார் ஓட்டிச் சென்றபோது, விபத்து ஏற்பட்டது, தீப்பிடித்த காரில் இருந்து அதிர்ஷ்டவசமாக தப்பினார் ரிஷாப். டேராடூன், மேக்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ரிஷாப் விபத்து குறித்து முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் கூறியது:

நான் கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய காலத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கினேன். அன்று முதல் எனது சகோதரர் மோட்டார் சைக்கிளை, என் கையால் கூட தொடக் கூட அனுமதித்தது இல்லை.

ரிஷப் விடயத்தில் அவரை காப்பாற்றிய கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். இது நல்ல பாடம். ரிஷப் போன்ற வீரர்கள், இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடப்பதை நாம் தவிர்க்கலாம். இன்னும் கூடுதல் கவனமாகச் செயல்பட வேண்டும்.

நீங்கள் ஒரு சாரதியை பணிக்கு வைத்துக் கொள்ளலாம். நீங்களாக தனியாக ஓட்டக்கூடாது. இப்படிச் செய்வது பொழுதுபோக்கு அல்லது ஆர்வமாகக் கூட இருக்கலாம். ஆனால் உங்களுக்கும் பொறுப்புகள் உள்ளன. உங்களை நீங்கள் மட்டுமே கவனித்துக் கொள்ள முடியும்-என்றார்.



# போட்டியின்போது மயங்கி வீழ்ந்த வீரர் கவலைக்கிடம்

அமெரிக்க உதைபந்தாட்டப் போட்டி ஒன்றின் போது மயங்கி வீழ்ந்த வீரர் ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஃபலோ பில்ஸ் அணி வீரர் டேமர் ஹம்லின் (வயது-24) என்பவரே இவ்வாறு மயங்கி வீழ்ந்தார்.

அமெரிக்கன் உதைபந்தாட்ட லீக்கில் பஃபலோ அணிக்கும் பேன்கல்ஸ் அணிக்கும் இடையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியின்போது இச்சம்பவம் இடம்பெற்றது.

எதிரணி வீரர் ஒருவருடன் மோதிக்கொண்ட டேமர் மயங்க வீழ்ந்தார். அவருக்கு ஒட்சிசன் அளிக்கப்பட்டு, அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இதையடுத்து வீரர்களும், ரசிகர்களும் கண்ணீருடன் காணப்பட்டனர்.

இச்சம்பவத்தையடுத்து இப்போட்டி தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

# தீவிர சிகிச்சை பிரிவிலிருந்து ரிஷப் பந்த் தனி அறைக்கு!



விபத்தில் காயமடைந்த பிரபல கிரிக்கெட் வீரர் ரிஷப் பந்த், தீவிர கிரிக்கெட் பிரிவிலிருந்து தனி அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உத்தரகண்ட் மாநிலம், ரூர்கியில் உள்ள தனது தாயைப் பார்க்க டில்லியில் இருந்து ரிஷப் பந்த் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை காரில் சென்றார். அம்மாநிலத்தின் மங்லௌர் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்த கார் சாலைத் தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானதில் ரிஷப் பந்த் படுகாயமடைந்தார்.

விபத்தை நேரில் பார்த்த அரசு பஸ் சாரதியும் நடத்துநரும் அவரை மீட்டு ரூர்கியிலுள்ள மருத்துவமனையில் முதல் கட்ட சிகிச்சைக்காக சேர்ந்தனர். பின்னர், உயர் சிகிச்சைக்காக டேராடூனில் உள்ள மேக்ஸ் மருத்துவமனைக்கு அவர் மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு நெற்றிப் பகுதியில் ஏற்பட்ட வெட்டுக்காயத்துக்காக பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இந்த விபத்தில் ரிஷப் பந்தின் தலை, முதுகு, காலில் காயங்கள் ஏற்பட்டன. விபத்துக்குள்ளான கார் முழுமையாகத் தீப்பிடித்து உருக்குலைந்தது. விபத்தைத் தொடர்ந்து ரிஷப் பந்தின் தாயாரிடம் பேசிய உத்தரகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, சிகிச்சை செலவை மாநில அரசு முழுமையாக ஏற்கும் என்றார். பந்துக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

படுங்காயங்களுடன் தப்பியுள்ள ரிஷப் பந்துக்கு மருத்துவ சிகிச்சையும், ஓய்வும் தேவை என்பதால் இந்தாண்டின் முதல் பாதியில் அவர் மீண்டும் விளையாட வாய்ப்புகள் மிக குறைவு எனப்படுகிறது. எனவே, ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் ஐபிஎல் போட்டி, பிப்ரவரியில் தொடங்கும் இந்தியா - ஆஸ்திரேலியா தொடர் போன்றவற்றில் ரிஷப் விளையாடமாட்டார் எனத் தெரிகிறது.

இந்நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ரிஷப் பந்த் தற்போது தனி அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிருமித் தொற்று அபாயம் காரணமாக ரிஷப் பந்தைத் தனி அறைக்கு மாற்றும்படி அவருடைய குடும்பத்தினரிடமும் மருத்துவமனை நிர்வாகத்திடமும் கூறினோம். தற்போது அவர் நலமாக உள்ளார். விரைவில் மீண்டு வருவார் என்று டில்லி கிரிக்கெட் சங்கத்தின் இயக்குநர் ஷ்யாம் சர்மா கூறியுள்ளார்.

# பஸ் கட்டணம் குறையாது

கொழும்பு, ஜன. 04

டீசல் விலை குறைக்கப்பட்டாலும், பஸ் கட்டணத்தை குறைப்பதற்கான வாய்ப்பில்லை என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

பஸ் கட்டணம் குறைக்கப்படவேண்டுமாயின், டீசலின் விலை 04 வீதத்தால் குறைக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் லங்கா ஒட்டோ டீசல் 15 ரூபாவாலும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (அ)

# முட்டை உற்பத்தி நிறுத்தப்படலாம்!

## உள்ளூர் உற்பத்தியாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 04

முட்டையை இறக்குமதி செய்யும் தீர்மானத்தை அரசாங்கம் முன்னெடுத்தால், தாம் தொழிலில் இருந்து விலக நேரிடும் என அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

முட்டை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவித்தார்.

2022 டிசெம்பரில், முட்டை விலை அதிகரிப்பிற்கு தீர்வாக, கொழும்பு, கம்பஹாவில் முட்டைகளை 55 ரூபாய்க்கு விற்கும் விசேட திட்டம் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது.

அரசாங்கமும் முட்டை உற்பத்தியாளர் சங்கமும் இணைந்து இந்த திட்டத்தை கொண்டுவந்தாலும் முட்டைகளை இறக்குமதி உள்ளூர் தொழில்துறைக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே முட்டையை இறக்குமதி செய்வது குறித்து இலங்கை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும் என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# அமெ.குடியுரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்தார் கோட்டாபய

கொழும்பு, ஜன. 04

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அமெரிக்கக் குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ளார் என ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் எந்த நாட்டிலும் புகலிடம் கிடைக்காதமை காரணமாக அமெரிக்க குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அமெரிக்க அரசாங்கம் இன்னும் கோரிக்கையை பரிசீலிக்கவில்லை என்றும் ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் கோட்டபாய தனது அமெரிக்க குடியுரிமையை இரத்து செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோட்டாபயவின் நிலையே காஞ்சனவுக்கும் ஏற்படும்!

## நளின் பண்டார எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 04

**எதிர்ப்புக்களை மீறி மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சர் காஞ்சன விஜேசேகர நடவடிக்கை எடுத்தால், கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைமையே அவருக்கும் ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலக்கரி இறக்குமதியில் இடம்பெறும் மோசடிகளை முகாமைத்துவம் செய்தால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய தேவையோ அல்லது மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய தேவையோ ஏற்படாது.

எது எவ்வாறாயினும் கூறியதை போன்று மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், தொழிற்துறைகள் முற்றாக வீழ்ச்சியடையும். இது பொருளாதார



நெருக்கடியில் கடுமையான தாக்கத்தை செலுத்தும்.

மக்களின் நம்பிக்கையை இழந்துள்ள அரசாங்கத்தின் ஆட்சி காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகள் தொடர்ந்தும் தாமதமாகி வருகின்றன. அதனைப் பெற்றுக்கொள்ள மக்கள் விரும்பும் அரசாங்கம் அமைக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் மாத்திரமின்றி, அரசாங்கம் முயற்சித்தால் மாகாண சபைத் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்த முடியும். தேர்தல் நடத்தப்பட்டால் மாத்திரமே நாட்டிலுள்ள சகல பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைக்கும்-என்றார். (அ)

# உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு சிவில் அமைப்புக்களும் கோரிக்கை

கொழும்பு, ஜன. 04

சிவில் சமூக குழுக்களும் தேர்தல் கண்காணிப்பாளர்களும் தேர்தலை நடத்துமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதை தாமதப்படுத்த சில தரப்பினர் தற்போது நீதிமன்றத்தை நாடுவதற்கு தீர்மானித்து வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அந்த முயற்சிகளை தோற்கடிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கப்படும் என மார்ச் 12 இயக்கத்தின் அழைப்பாளர் தெரிவித்தார்.

தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என பல்வேறு அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்ற அதே வேளை, தேர்தலை நடத்துவது தேவையற்றது என தம் மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்தி புதிய உறுப்பினர்களை நியமிப்பதன் மூலம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்காது என்றும் அவர் கூறினார். (அ)

# விநாயகபுரம் பகுதியில் கொலை: ஒருவர் பொலிஸாரினால் கைது!

கிளிநொச்சி, ஜன. 034

கிளிநொச்சி மாவட்டம் விநாயகபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன் தினம் காலை கைது செய்யப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்டவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்று முன் தினம் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி - விநாயகபுரம் பகுதியில் நேற்று முன் தினம் காலை 26 வயதான இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். (அ)

# கஞ்சாவை சட்டபூர்வமானதாக்க பாடுபடும் இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஜன. 03

வீதி கடைகளில் விற்பதற்காகவும், அனைவரும் வாங்கி பயன் படுத்துவதற்காகவும் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குமாறு கோரவில்லை. வர்த்தக பயிராக அறிமுகப்படுத்துமாறு கோரியுள்ளேன். பயன்படுத்துபவர்கள் பயன்படுத்துவார்கள். கஞ்சாவை சட்டபூர்வமாக்கினால் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம். தவறான மற்றும் முட்டாள்தனமான சிந்தனைகளில் இருந்து வெளிவரும் வரை இந்த நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. டொலர் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்கு கொண்டு வரும் திட்டங்களை முன்வைக்கும் போது ஒரு சில அரச அதிகாரிகள் அரசியல் நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தி, அந்த திட்டங்களுக்கு எதிராக செயற்படுகிறார்கள்.

வங்குரோத்து நிலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் வெளிநாட்டு முதலீடுகள் தடைப்பட்டுள்ளன. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரச தரப்பினர் அரசியல் நோக்கங்களை ஒரு புறம் வைத்துவிட்டு நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டும். நாடு என்பதொன்று மிகுதியாக இருந்தால் தான் அனைவரும் அரசியல் செய்யவேண்டும்.

தேர்தல் நடத்தும் நிலையில் நாட்டின் நிதி நிலைமை இல்லை.நிதி நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும் அதன் தாக்கத்தையும் நாட்டு மக்கள் எதிர்கொள்ள வேண்டும். நாட்டு மக்கள் தேர்தலை கோரவில்லை. எதிர்த்தரப்பினர் மாத்திரம் தேர்தலை கோருகிறார்கள்.

தூர நோக்கமற்ற கொள்கை இல்லாத காரணத்தினால் மின்சாரம்,சுகாதாரம் ஆகிய துறைகளில் பல பிரச்னைகளை தற்போது எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மின்சாரம், நீர், எரிபொருள் உள்ளிட்ட சேவைகளின் நெருக்கடிகளை எதிர்கொள்ள எந்நிலையிலும் தயாராக இருக்கவேண்டும்.

வெளிநாட்டு கையிருப்பு பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் கஞ்சா பயிர்செய்கையை சட்டபூர்வமாக்குமாறு நான் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஒரு சில அரச அதிகாரிகள் தவறான கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்கள். ஒருசில அரச அதிகாரிகள் தான் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளார்கள். சேறு பூசல்களினால் என்னை வீழ்த்த முடியாது. எனது பயணத்தை நான் தொடர்வேன்.

வீதி கடைகளில் விற்பதற்காகவும்,அனைவரும் வாங்கி பயன் படுத்துவதற்காகவும் கஞ்சாவை சட்டபூர்வமாக்குமாறு கோரவில்லை. வர்த்தக பயிராக அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். கஞ்சாவை பயன்படுத்துபவர்கள் பயன் படுத்துவார்கள், பயன்படுத்தாதவர்கள் பயன்படுத்தமாட்டார்கள்.நாட்டு மக்கள் அனைவரும் சிகரெட் பாவிக்கவில்லை. அதுபோல் தான் இதுவும்.

கஞ்சாவை சட்டபூர்வமாக்கினால் நினைத்து பார்க்காத தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம்.இதனூடாக பல உற்பத்திகளை உருவாக்கலாம்.இலங்கை மக்களின் வாழ்க்கையுடன் கஞ்சா தொடர்புபட்டுள்ளது. ஆதிகாலத்தில் இலங்கையர்கள் கஞ்சாவை உணவாக உட்கொண்டதுடன், புகைத்தலுக்காக பயன்படுத்தியுள்ளார்கள்-என்றார். (அ)

## யாழ்...

முதல்வரும் பதவியை துறந்த பின்னர் மாநகர சபையின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், சட்டமா அதிபரின் கருத்தை பெறவுள்ளதாகவும், மீண்டும் முதல்வர் தெரிவு இடம் பெறாது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், யாழ்.மாநகரசபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனான கலந்துரையாடலுக்கு வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்படி, 5ஆம் திகதி காலை 10 மணி முதல் 10.30 வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்களும், 10.30 முதல் 11 மணிவரை ஈ.பி.டி.பி மாநகரசபை உறுப்பினர்களும், 11 மணி முதல் 11.30 மணிவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐ.தே.க, சு.க, தமிழர் விடுதலை கூட்டணி கட்சிகளின் மாநகரசபை உறுப்பினர்களும் ஆளுநர் செயலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

## சீனாவுடன்...

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது காணப்படும் பாரிய பிரச்சினை டொலர் நெருக்கடியாகும். இதன் காரணமாக எமக்கு வெளிநாட்டு கடன் மற்றும் வட்டியை செலுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

சுதந்திரத்தின் பின்னரான 74 ஆண்டுகளில் மிகவும் தீர்க்கமான கால கட்டத்திலேயே நாம் தற்போது இருக்கின்றோம். அத்தோடு சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களான மோடி மற்றும் பிட்ச் ரேட்டிங் என்பவற்றின் தரப்படுத்தலில் இலங்கை தொடர்ந்தும் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்கு அரசியல் ரீதியில் எந்தவொரு தீர்வினையும் வழங்க முடியாது. எம்மால் விடுக்கப்படும் கடன் சான்று பத்திரங்களை ஏனைய நாடுகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது பெரும் நெருக்கடியை தோற்றுவிக்கும்.

யார் ஆட்சி செய்தாலும் , எந்தளவு அவசியமான பொருட்களாகக் காணப்பட்டாலும் இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்படும். எம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே இறக்குமதி தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

எனவே இந்த நெருக்கடிக்கான தீர்வாக துரிதமாக டொலர் இருப்பினை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இதற்கு வேறு எந்த அரசியல் தீர்வும் கிடையாது.

எரிபொருள் , உரம் , இரசாயன பொருட்கள், மருந்து வகைகள், தொழிற்துறைக்கான மூலப்பொருட்கள் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்து கொள்வதற்கான தேவை தற்போது காணப்படுகிறது.

எனவே கடன் மறுசீரமைப்புடன் ஏதேனுமொரு வகையில் டொலர் கையிருப்பை அதிகரித்துக் கொள்ளாவிட்டால் , எமது நாடு மோசமான நிலைமைக்கு தள்ளப்படும்.

மத்திய வங்கி , நிதி அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்கள் கடன் மறுசீரமைப்புக்களுக்கான பொறுப்புக்களை வழங்கியுள்ள சர்வதேச நிறுவனங்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன.

எனவே விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச வர்த்தக சந்தைக்குள் உள்நுழைந்து முடிந்தளவு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வியட்நாம் , சிங்கப்பூர் , மலேசியா, சீனா உள்ளிட்ட நாடுகள் அதிகளவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

அவ்வாறில்லை எனில் எம்மால் ஏற்றுமதி பொருளாதாரத்தில் சர்வதேச சந்தைகளில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்படும். இதற்கமைவான சில தீர்மானங்களை அரசாங்கமும் முன்னெடுத்துள்ளது - என்றார். (அ)

# மக்கள் எதிர்ப்பை திசை திருப்ப எரிபொருள் விலைகள் குறைப்பு

## ஒன்றிணைந்த தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 04

மூன்று இலக்கங்களினால் எரிபொருள் விலையை குறைக்கும் சாத்தியம் உள்ள நிலையில் அரசாங்கம் இரு இலக்கங்களினால் எரிபொருள் விலையை சொற்பமாக குறைத்துள்ளது. மின் கட்டண அதிகரிப்புக்கு எதிரான மக்க ளின் எதிர்ப்பை திசை திருப்புவதற்காக எரிபொருள் விலைகள் குறைக்கப்பட் டுள்ளன என ஒன்றிணைந்த தொழிற்சங் கத்தின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கமைய ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படும் என அரசாங்கம் குறிப்பிட்டது. எரிபொருள் விலையை அதிகரிக்க விலைச் சூத்திரம் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் விலை குறைப்புக்கு விலை சூத்திரம் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது. பெற்றோலின் விலை கடந்த இரு மாதங்களாக முறையாக குறைக்கப்படவில்லை.

கொழும்பு துறைமுகத்திற்கு ஒரு லீற்றர் பெற்றோல் 240 ரூபாவிற்கும்,ஒரு லீற்றர் டீசல் 260 ரூபாவிற்கும் 95 ரக பெற்றோல் 240 அல்லது 242 ரூபாவிற்கும் கொண்டு வரப்படுகிறது.

தற்போதைய நிலையில் உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ளது. இவ்வாறான பின்னணியில் மூன்று இலக்கங்களினால் எரிபொருள் விலையை குறைக்கும் சாத்தியம் உள்ள நிலையில், இரண்டு இலக்கங்களினால் அதுவும் மிகவும் குறைந்த பட்சத்தில் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ள மூன்று எரிபொருள் கப்பல்களுக்கு 155 இலட்சம் டொலர் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. தாமதக் கட்டணம் செலுத்துவது தற்போது புதிய மோசடியாக உள்ளது. இதன் காரணமாகவே இந்த மாதம் எரிபொருள் விலையை அரசாங்கம் குறைக்கப்படவில்லை - என்றார். (அ)

## சிறுமி...

17 வயதாக இருந்த சிறுமியை இரண்டு தமிழ் பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர். ஆட்களில்லாத வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்விற்குள்ளாக்கியுள்ளனர்.

அதனை காணொலியாக பதிவு செய்து, அதை வைத்து மிரட்டி, கடந்த 2 வருடங்களாக தொடர் வல்லுறவுக்குள்ளாக்கி வந்துள்ளனர்.

தற்போது 19 வயதாகியுள்ள அந்த யுவதி, கடந்த வியாழக்கிழமை திடீரென மயங்கி விழுந்துள்ளார். இதையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையின் அடிப்படையிலும், அவரது வாக்குமூலத்தின் அடிப்படையிலும், அவர் 2 வருடங்களாக பாலியல் வன்புணர்வுக்குள்ளாகியது தெரியவந்தது.

இதையடுத்து, நடைபெற்ற விசாரணையின், சம்பவம் நடைபெற்ற போது சந்தேகநகரான பொலிஸ் உத்தியோகத்தர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலும், பின்பு தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும், தற்போது முருங்கன் பொலிஸ் நிலையத்திலும் கடமையாற்றுவது தெரியவந்தது.

அந்த சந்தேகநபர், சிறுமியை வன்புணர்விற்குள்ளாக்கியபோது எடுத்த வீடியோவை பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கியுள்ளார்.

தம்மிடமும் வீடியோ இருப்பதாக தெரிவித்து, மாணவர்கள் சிலரும் அந்த சிறுமியை வன்புணர்விற்குள்ளாக்க முயன்றதும் தெரிய வந்துள்ளது.

அந்த பொலிஸ் உத்தியோகத்தரின் சொந்த இடமும் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒரு பகுதியே. அவருடன் இணைந்து வல்லுறவுக்குள்ளாக்கிய மற்றைய நபர், சிறுமியின் வாக்குமூலத்திலிருந்து அடையாளம் காணப்படவில்லை.

அடையாளம் காணப்பட்ட சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

விசாரணைக்கு சமூமளித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஆஷு மாரசிங்கவின் முறைப்பாடு: ஆதர்ஷா முன் பிணை கோரி மனு

கொழும்பு, ஜன. 04

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பேராசிரியர் ஆஷு மாரசிங்கவுக்கு எதிராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுடன் இணைந்து ஊடகவியலாளர் சந்திப் பொன்றை நடத்திய ஆதர்ஷா கரந்தன, ஆஷு மாரசிங்க செய்த முறைப்பாட்டுக்கு அமைய தான் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டால், பிணை அளிக்குமாறு கோரி முன் பிணை மனுவொன்றினை தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பேராசிரியர் ஆஷு மாரசிங்க செல்லப் பிராணியான நாயை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக கூறப்படும் வீடியோ பதிவு ஆதர்ஷா கரந்தன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகியோரால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட பின்னர் வைரலாகியுள்ளது.

இந் நிலையில், ஊடகங்களுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகள் முற்றிலும் பொய்யானவை என்றும், இதற்காக செம்மைப்படுத்தப்பட்ட காணொளி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆஷு மாரசிங்க செய்த முறைப்பாட்டின் பேரில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தன்னைக் கைதுசெய்ய முயற்சிப்பதாக ஆதர்ஷா கரந்தன தனது முன் பிணை மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

இதன் போது, சிஐடி பணிப்பாளர் மற்றும் கணினி குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோரை எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டார். (அ)

## மதுபானங்கள்...

உள்ளார். வைன், பியர் உள் ளிட்ட அனைத்து வகையான மதுபானங்களுக்கு நேற்று செவ்வாய்கிழமை நள்ளிரவு முதல் 20 வீதம் வரி அறவிடப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## தேர்தல்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவதென்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்துவதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, 2023 ஆம் ஆண்டு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தேர்தலை நடத்துவதற்கு குறைந்தபட்சம் 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவேண்டும் என்று மனுதாரர் கூறினார்.

இதற்கிடையில், தேர்தல் கோரிக்கையில் சீர்குலைக்கும் கூறுகள் இருப்பதாக மனுதாரர் மேலும் கூறினார்.

தற்போதைய சூழ்நிலைகள் அத்தகைய தேர்தலை நடத்துவதற்கு உத்தரவாதம் அளிக்கவில்லை என்றாலும். முற்றிலும் அரசியல் நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரலால் இயக்கப்படுகிறது, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு மீது தேவையற்ற செல்வாக்கை செலுத்த முயற்சிப்பதாக அவர் தெரிவித்தார். (அ)

## பெற்றோல்...

பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த வரி சதவீதங்களு டன் ஒப்பிடுகையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு இன்னும் அறிவிக்கப்படவில்லை. (அ)

## மார்ச்...

திகதிக்குள் புதிய சபைகள் நிறுவப்பட வேண்டும்.

அதேபோல தேர்தலை நடத்துவதற்கான நிதியையும், திறைசேரியிடமிருந்து தேர்தல் ஆணைக்குழு கோரியுள்ளது. (அ)

## இந்தவார...

ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமையை மீளப்பெறுவதற்கான எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் டுபாய் சென்றுள்ளார். இந்நிலையில் இம்மாதம் 6 அல்லது 7 ஆம் திகதி அவர் நாடு திரும்புவார்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஊடகவியலாளர் கோரிய தகவலை வழங்காவிட்டால் வழக்கு தாக்கல்!

## கிளி. சுகாதார சேவைகள் பணிப்பாளரை எச்சரித்தது தகவல் அறியும் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 04

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர் கோரிய தகவலை இந்த மாதம் 25 ஆம் திகதிக்குள் வழங்கவேண்டும். தவறின் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என இலங்கை தகவல் அறியும் ஆணைக்குழு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

கிளிநொச்சியை சேர்ந்த ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் கடந்த மார்ச் மாதம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற மாகாண விசேட பெண் நோயியல் மருத்துவமனை தொடர்பில் தகவல்களை கோரியிருந்தார்.

ஆனால் குறித்த தகவல்களை வழங்குவதை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தவிர்த்திருந்தது. எனவே இது தொடர்பில் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு ஊடகவியலாளரால் 29.03.2022 அன்று முறையீடு செய்யப்பட்டிருந்தது. எனவே அதற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் தகவல் அறியும் ஆணைக்குழுவிடம் 30.06.2022 அன்று ஊடகவியலாளரால் முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு அமைய நேற்று குறித்த விடயம் தொடர்பில் சூம் இணைய வழியில் தகவல் அறியும் ஆணைக்குழு விசாரணையை மேற்கொண்டது.

இதன்போது குறித்த தகவல்கள் எதுவும் தங்களிடம் இல்லை என்றும் விசேட வெளிநாட்டு நிதி ஒதுக்கீடு மூலம் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஆகவே இதன் தகவல்கள் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் அல்லது மத்திய சுகாதார சுகாதார அமைச்சிடம் தான் உள்ளன என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந. சரவணபவன் தகவல் அறியும் ஆணைக்குழுவின் முன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த ஆணைக்குழு, சட்டத்தின் பிரகாரம் ஊடகவியலாளர் கோரிய தகவல்களை ஜனவரி 25 ஆம் திகதிக்குள் உரிய இடத்தில் பெற்று வழங்குவதோடுதங்களுக்கும் பிரதியிடவேண்டும் என உத்தரவிட்டதோடு தவறின் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் எச்சரித்தது.

இதன்போது கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆணைக்குழுவிடம், ஊடகவியலாளர் ஆணைக்குழு அனுப்பிய கடிதங்கள் உள்ளிட்ட விடயங்களை முகநூலில் பதிவிடுகின்றார். இதனை கட்டுப்படுத்த வேண்டும் எனக் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த ஆணைக்குழு முகநூலில் பதிவிடுவதற்கு எதிராக ஆணைக்குழு எதுவும் செய்யமுடியாது. அது ஆணைக்குழுவின் பொறுப்பல்ல என தெரிவித்துள்ளது. (அ)

# நுவரெலியாவில் பூ பனி



கொழும்பு, ஜன. 04

நுவரெலியா நகரசபைக்குட்பட்ட பல இடங்களிலும் அம்பேவல, பட்டிப்பொல ஆகிய பிரதேசங்களில் நேற்று அதிகாலை பூ பனி பெய்தது.

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதத்தில் நுவரெலியாவில் பூ பனி பொழிவு காணப்படும் நிலையில், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நுவரெலியா நகரிலுள்ள பூங்கா, தேயிலைத் தோட்டங்களில் பூ பனி பொழிவு காணப்பட்டது.

மேலும் நேற்று அதிகாலை நுவரெலியாவின் வெப்ப நிலை 5 பாகை செல்சியஸாக காணப்பட்டதால் அதிகம் குளிரான நிலையை மக்கள் எதிர்கொண்டனர்.

இதேவேளை பூ பனி பொழிவால் தேயிலை, மரக்கறி மற்றும் மலர் உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (அ)

# திருவடி நிலை கடற்பரப்பில் மீனவர் நீரில் மூழ்கி மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 04

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருவடிநிலை கடலில் மிதந்து வந்த நிலையில் மீனவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

குறித்த மீனவர் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்கு சென்று நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

உறவினர்கள் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முற்பட்டவேளை கடற்படையினருக்கும் உறவினர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

ஆயினும் அவர்கள் சடலத்தை வீட்டிற்கு எடுத்து சென்றனர்.

சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த கணபதி தவம் (வயது 58) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஏ.ரி.எம். இயந்திரம் உடைப்பு; பொலிஸாரால் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 04

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உடையார் கட்டு பகுதியில் அமைந்துள்ள ஏ.ரி.எம். இயந்திரத்தின் கண்ணாடி உடைத்து சேதப்படுத்தியமை தொடர்பில் வங்கி முகாமையாளரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் உள்ள உடையார் கட்டு சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள ஏ.ரி.எம். இயந்திரத்தின் கண்ணாடியை நேற்றுமுன்தினம் இரவு விசமிகள் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு இலங்கை வங்கியின் முகாமையாளரால் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஏ.ரி.எம். இயந்திர பகுதிக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வருமான வரி விவகாரம் ஜனவரி 23 ஆர்ப்பாட்டம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜன. 04

வரிமான வரி அதிகரிப்பு தொடர்பில் தாங்கள் முன்வைத்துள்ள கரிசனைகளுக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்காவிட்டால் ஜனவரி 23ஆம் திகதி முதல் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடப்போவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டியவை சந்தித்த பின்னர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் இன்று பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளதாகவும், சாதகமான பதில் கிடைக்காவிட்டால் ஏற்கனவே திட்டமிட்டபடி 23 ஆம் திகதி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்போம் எனவும் அவர் கூறினார். (அ)

# இறைச்சிக்காக வெட்டுவதற்குத் தயாரான 4 பசு மாடுகளை காப்பாற்றிய பொலிஸார்



வடமராட்சி,ஜன. 04

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்க்கு உட்பட்ட துன்னாலை குடவத்தைப் பகுதியில் இறைச்சிக்காக வெட்டுவதற்க்கு தயாரான நான்கு பசு மாடுகளை பருத்தித்துறை பொலிஸார் அதிரடியாக காப்பாற்றியுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை பொலீஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினரே இந்த அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டு இறைச்சிக்காக வெட்டுவதற்கு தயாரான நான்கு பசு மாடுகளையும் காப்பாற்றினர்.

இது குறித்து கருத்து தெரிவித்த பருத்தித்துறை பொலிஸார்-

அண்மை நாட்களாக தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்படுவதாக தமக்கு கிடைத்த தொடர் முறைப்பாடுகளின் அடிப்படையில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், குறித்த பசுக்களின் உரிமையாளர்களை உரிய ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டனர். (அ-02)

# 33 உணவு பொருட்கள் சீனாவுக்கு ஏற்றுமதி

கொழும்பு, ஜன. 04

இலங்கையில் இருந்து சீனாவிற்கு 33 உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு சீனாவின் சுங்க நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இவற்றில் 29 தயாரிப்புகள் கடல் மீன்பிடி நீர்வாழ் பொருட்கள் என்றும், அங்கு பதிவு செய்யப்பட்ட 38 இலங்கை நிறுவனங்கள் ஏற்றுமதியாளர்களாகச் செயல்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு கூறினார். (அ)

# 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படும்

கொழும்பு, ஜன. 04

வடமாகாணத்தில் அப்பிரதேச மக்களின் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தி குடிதண்ணீர் பிரச்னையை தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்ததாவது:

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட உள்ளன.

அனைவருக்கும் பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கவேண்டும் என்ற அரசின் கருத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் அந்த அமைச்சின் கீழ் மீள்குடியேற்றப் பிரிவு, சமூக நீர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நாள் ஒன்றுக்கு 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டுள்ளது என்று மீள்குடியேற்றப் பிரிவு தெரிவிக்கிறது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
07.00 மணி : இயற்கை வழி-எஸ்.உதயகுமார்




7.05 மணி : உளவியல் கருத்து - உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி - கடாச்சரம் மார்க்கண்டு
7.20 மணி : சித்த மருத்துவம் - வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.00 மணி : தொடர்நாடகம்
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
12.00 மணி : ஜாலிய ஜிம்கானா - நேரலை

**பகல்**

1.00 மணி : நலந்தானா் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : டொப் 10 மூவீஸ் - புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



6.30 மணி : குறுந்திரை நேரம்

**இரவு**

07.00 மணி : மனிதனின் மறுபக்கம்
07.30 மணி : உதவும் கரங்கள்



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அறிந்தும் அறியாமலும்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு